# thiruththoNDar purANam (periya purANam) panniraNDAm tirumuRai

## (in tamil script, TSCII format)

## சேக்கிழார் அருளிய

# திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்

## பன்னிரண்டாம் திருமுறை

### முதற் காண்டம்

# 1. திருமலைச் சருக்கம்

---

This page is courtasy of Project Madurai. This thirumuRai is being proof-read. So this current form may have errors in it.

---

periya puranam in tscii format file generated from Koeln version using convertor (two corrections n2 and jn) file yet to be proof/read file edited to be in TSCII 1.7 ENCODING ------------------------------------------------

Periya puranam text

| Chapter No. | Transliterated text | TSCII HTML format | Tamil PDF |
|---|---|---|---|
| 1 | thirumalaic carukkam | திருமலைச் சருக்கம் | PDF |
| 2 | thillaivAzandhaNar carukkam | தில்லைவாழந்தணர் சருக்கம் | PDF |
| 3 | ilaimalintha carukkam | இலைமலிந்த சருக்கம் | PDF |
| 4 | mummaiyAl ulakANDa carukkam | மும்மையால் உலகாண்ட சருக்கம் | PDF |
| 5 | thiruninRa carukkam | திருநின்ற சருக்கம் | PDF |

| | | | |
|---|---|---|---|
| 6 | vambaRA varivaNDu carukkam - thirunyAna cambanthar purANam | வம்பறா வரிவண்டு சருக்கம் - திருஞானசம்பந்தர் புராணம் | PDF |
| | vambaRA varivaNDu carukkam - EyarkOn muthalAya nAyanmArkaL | வம்பறா வரிவண்டு சருக்கம் - ஏயர்கோன் முதலாய நாயன்மார்கள் | PDF |
| 7 | vArkoNDa vanamulaiyAL carukkam | வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் | PDF |
| 8 | poyyaDimaiyillAtha pulavar carukkam | பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் | PDF |
| 9 | kaRaikkaNDan carukkam | கறைக்கண்டன் சருக்கம் | PDF |
| 10 | kaDal cUzntha carukkam | கடல் சூழ்ந்த சருக்கம் | PDF |
| 11 | paththarAyp paNivAr carukkam | பத்தராய்ப் பணிவார் சருக்கம் | PDF |
| 12 | manniyacIrc carukkam | மன்னியசீர்ச் சருக்கம் | PDF |
| 13 | veLLAnaic carukkam | வெள்ளானைச் சருக்கம் | PDF |


# 1. திருமலைச் சருக்கம்

%பாயிரம்

1. உலகு எலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன் 0001-1
நிலவு உலாவிய நீர் மலி வேணியன் 0001-2
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான் 0001-3
மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம் 0001-4

2. ஊன் அடைந்த உடம்பின் பிறவியே 0002-1
தான் அடைந்த உறுதியைச் சாரும் ஆல் 0002-2
தேன் அடைந்த மலர்ப் பொழில் தில்லை உள் 0002-3
மா நடம் செய் வரதர் பொன் தாள் தொழ 0002-4

3. எடுக்கும் மாக் கதை இன் தமிழ்ச் செய்யுள் ஆய் 0003-1
நடக்கும் மேன்மை நமக்கு அருள் செய்திடத் 0003-2
தடக் கை ஐந்து உடைத் தாழ்செவி நீள்முடிக் 0003-3
கடம் களிற்றைக் கருத்து உள் இருத்து வாம் 0003-4

4. மதி வளர் சடைமுடி மன்றுள் ஆரை முன் 0004-1
துதி செயும் நாயன் மார் தூய சொல் மலர்ப் 0004-2
பொதி நலன் நுகர் தரு புனிதர் பேர் அவை 0004-3
விதி முறை உலகினில் விளங்கி வெல்க ஏ (வே) 0004-4

5. அளவில் ஆத பெருமையர் ஆகிய 0005-1
அளவில் ஆ அடியார் புகழ் கூறுகேன் 0005-2
அளவு கூட உரைப்பது அரிது ஆயினும் 0005-3
அளவில் ஆசை துரைப்ப அறைகுவேன் 0005-4

6. தெரி அரும் பெருமைத் திருத் தொண்டர் தம் 0006-1
பொரு அரும் சீர் புகலல் உற்றேன் முற்றப் 0006-2
பெருகு தெண் கடல் ஊற்று உண் பெரு நசை 0006-3
ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமை யேன் 0006-4

7. செப்பல் உற்ற பொருளின் சிறப்பினால் 0007-1
அப் பொருட்கு உரை யாவரும் கொள்வர் ஆல் 0007-2
இப் பொருட்கு என் உரை சிறிது ஆயினும் 0007-3
மெய்ப் பொருட்கு உரியார் கொள்வர் மேன்மை ஆல் 0007-4

8. மேய இவ் உரை கொண்டு விரும்பும் ஆம் 0008-1
சேயவன் திருப் பேர் அம்பலம் செய்ய 0008-2
தூய பொன் அணி சோழன் நீடு ஊழி பார் 0008-3
ஆய சீர் அந பாயன் அரசு அவை 0008-4

9. அருளின் நீர்மைத் திருத் தொண்டு அறிவரும் 0009-1
தெருள் இல் நீர் இது செப்புதற்கு ஆம் எனின் 0009-2
வெருள் இல் மெய்ம் மொழி வான் நிழல் கூறிய 0009-3
பொருளின் ஆகும் எனப் புகல்வாம் அன்றே 0009-4

10. இங்கு இதன் நாமம் கூறின் இவ் உலகத்து முன்னாள் 0010-1
தங்கு இருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற 0010-2
பொங்கிய இருளை ஏனைப் புற இருள் போக்கு கின்ற 0010-3
செங் கதிரவன் போல் நீக்கும் திருத் தொண்டர் புராணம் என்பாம் 0010-4

1 திருமலைச் சருக்கம்

1 திருமலைச் சிறப்பு
1. பொன்னின் வெண்திரு நீறு புனைந்து என 0011-1
பன்னும் நீள் பனி மால் வரைப் பால் அது 0011-2
தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும் 0011-3
மன்னி வாழ் கயிலைத் திரு மா மலை 0011-4

2. அண்ணல் வீற்று இருக்கப் பெற்றது ஆதலின் 0012-1
நண்ணும் மூன்று உலகும் நான்மறைகளும் 0012-2
எண்ணில் மா தவம் செய்ய வந்து எய்திய 0012-3
புண்ணியம் திரண்டு உள்ளது போல்வது 0012-4

3. நிலவும் எண் இல் தலங்களும் நீடு ஒளி 0013-1
இலகு தண் தளிர் ஆக எழுந்தது ஓர் 0013-2
உலகம் என்னும் ஒளி மணி வல்லி மேல் 0013-3
மலரும் வெண் மலர் போல்வ தம் மால்வரை 0013-4

4. மேன்மை நான் மறை நாதமும் விஞ்சையர் 0014-1
கான வீணையின் ஓசையும் கார் எதிர் 0014-2
தான மாக்கள் முழக்கமும் தாவில் சீர் 0014-3
வான துந்துபி ஆர்ப்பும் மருங்கு எலாம் 0014-4

5. பனி விசும்பில் அமரர் பணிந்து சூழ் 0015-1
அனித கோடி அணிமுடி மாலையும் 0015-2
புனித கற்பகப் பொன் அரி மாலையும் 0015-3
முனிவர் அஞ்சலி மாலையும் முன் எனலாம் 0015-4

6. நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின் 0016-1
நாடும் ஐம் பெரும் பூதமும் நாட்டுவ 0016-2
கோடி கோடி குறள் சிறு பூதங்கள் 0016-3
பாடி ஆடும் பரப்பது பாங்கு எலாம் 0016-4

7. நாயகன் கழல் சேவிக்க நான்முகன் 0017-1
மேய காலம் அலாமையின் மீண்டு அவன் 0017-2
தூய மால் வரைச் சோதியில் மூழ்கி ஒன்று 0017-3
ஆய அன்னமும் காணாது அயர்க்கும் ஆல் 0017-4

8. காதில் வெண்குழையோன் கழல் தொழ நெடியோன் காலம் பார்த்திருந்தும் அறியான் 0018-1
சோதி வெண் கயிலைத் தாழ்வரை முழையில் துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு 0018-2
மீது எழு பண்டைச் செம் சுடர் இன்று வெண்சுடர் ஆனது என்று அதன் கீழ் 0018-3
ஆதி ஏனமதாய் இடக்கல் உற்றான் என்று அதனை வந்து அணைதரும் கலுழன் 0018-4

9. அரம்பையர் ஆடல் முழவுடன் மருங்கில் அருவிகள் எதிர் எதிர் முழங்க 0019-1
வரம் பெறு காதல் மனத்துடன் தெய்வ மது மலர் இரு கையும் ஏந்தி 0019-2
நிரந்தரம் மிடைந்த விமான சோபான நீடு உயர் வழியினால் ஏறிப் 0019-3
புரந்தரன் முதலாங் கடவுளர் போற்றப் பொலிவது அத் திருமலைப் புறம்பு 0019-4

10. வேத நான் முகன் மால் புரந்தரன் முதலாம் விண்ணவர் எண்ணிலார் மற்றும் 0020-1
காதலால் மிடைந்த முதல் பெருந்த் தடையாம் கதிர் மணிக் கோபுரத்து உள்ளார் 0020-2
பூத வேதாளப் பெரும் கண நாதர் போற்றிடப் பொதுவில் நின்று ஆடும் 0020-3
நாதனார் ஆதி தேவனார் கோயில் நாயகன் நந்தி எம் பெருமான் 0020-4

11. நெற்றியின் கண்ணர் நால் பெருந்தோளர் நீறு அணி மேனியர் அநேகர் 0021-1
பெற்றம் மேல் கொண்ட தம்பிரான் அடியார் பிஞ்ஞகன் தன் அருள் பெறுவார் 0021-2
மற்றவர்க் கெல்லாம் தலைமை ஆம் பணியும் மலக்கையில் சுரிகையும் பிரம்பும் 0021-3
கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான் காப்பது அக் கயிலைமால் வரைதான் 0021-4

12. கையில் மான் மழுவார் கங்கை சூழ் சடையில் கதிர் இளம் பிறை நறும் கண்ணி 0022-1
ஐயர் வீற்றிருக்கும் தன்மையின் ஆலும் அளப்பரும் பெருமையினால் ஆலும் 0022-2
மெய் ஒளி தழைக்கும் தூய்மையின் ஆலும் வெற்றி வெண்குடை அந பாயன் 0022-3
செய்ய கோல் அபயன் திருமனத்து ஓங்கும் திருக் கயிலாய நீள் சிலம்பு 0022-4

13. அன்ன தன் திருத் தாழ் வரையின் இடத்து 0023-1
இன்ன தன்மையன் என்று அறியாச் சிவன் 0023-2
தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கின்றான் 0023-3
உன்னாரும் சீர் உப மன்னிய முனி 0023-4

14. யாதவன் துவரைக்கு இறை யாகிய 0024-1
மாதவன் முடி மேல் அடி வைத்தவன் 0024-2
பூதநாதன் பொரு அரும் தொண்டினுக்கு 0024-3
ஆதி அந்தம் இலாமை அடைந்தவன் 0024-4

15. அத்தர் தந்த அருள் பால் கடல் உண்டு 0025-1
சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன் 0025-2
பத்தர் ஆய முனிவர் பல் ஆயிரவர் 0025-3
சுத்த யோகிகள் சூழ இருந்து உழி 0025-4

16. அம் கண் ஓர் ஒளி ஆயிரம் ஞாயிறு 0026-1
பொங்கு பேர் ஒளி போன்று முன் தோன்றிடத் 0026-2
துங்க மாதவர் சூழ்ந்து இருந்தார் எலாம் 0026-3
இங்கு இதென் கொல் அதிசயம் என்றலும் 0026-4

17. அந்தி வான் மதி சூடிய அண்ணல் தாள் 0027-1
சிந்தியா உணர்ந்து அம் முனி தென் திசை 0027-2
வந்த நாவலர் கோன் புகழ் வன் தொண்டன் 0027-3
எந்தையார் அருளால் அணைவான் என 0027-4

18. கைகள் கூப்பித் தொழுது எழுந்து அத் திசை 0028-1
மெய்யில் ஆனந்த வாரி விரவிடச் 0028-2
செய்ய நீள் சடை மாமுனி செல்வுழி 0028-3
ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர் 0028-4

19. சம்புவின் அடித் தாமரைப் போதலால் 0029-1
எம்பிரான் இறைஞ்சாய் இஃது என் எனத் 0029-2
தம்பிரானைத் தன் உள்ளம் தமீஇயவன் 0029-3
நம்பி ஆரூரன் நாம் தொழும் தன்மையான் 0029-4

20. என்று கூற இறைஞ்சி இயம்புவார் 0030-1
வென்ற பேர் ஒளியார் செய் விழுத்தவம் 0030-2
நன்று கேட்க விரும்பும் நசையின் ஓம் 0030-3
இன்று எமக்கு உரை செய்து அருள் என்றலும் 0030-4

21. உள்ள வண்ணம் முனிவன் உரை செய்வான் 0031-1
வெள்ள நீர்ச்சடை மெய்ப் பொருள் ஆகிய 0031-2
வள்ளல் சாத்தும் மது மலர் மாலையும் 0031-3
அள்ளும் நீறும் எடுத்து அணைவான் உளன் 0031-4

22. அன்னவன் பெயர் ஆலால சுந்தரன் 0032-1
முன்னம் ஆங்கு ஒருநாள் முதல்வன் தனக்கு 0032-2
இன்ன ஆம் எனும் நாண் மலர் கொய்திடத் 0032-3
துன்னினான் நந்தவனச் சூழலில் 0032-4

23. அங்கு முன் எமை ஆளுடை நாயகி 0033-1
கொங்கு சேர் குழற்கு ஆம் மலர் கொய்திடத் 0033-2
திங்கள் வாள் முகச் சேடியர் எய்தினார் 0033-3
பொங்கு கின்ற கவின் உடைப் பூவைமார் 0033-4

24. அந்தம் இல் சீர் அனிந்திதை ஆய் குழற்கு 0034-1
கந்தம் மாலைக் கமலினி என்பவர் 0034-2
கொந்து கொண்ட திருமலர் கொய் வுழி 0034-3
வந்து வானவர் ஈசர் அருள் என 0034-4

25. மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் 0035-1
தீது இலாத் திருத் தொண்டத் தொகை தரப் 0035-2
போதுவார் அவர் மேல் மனம் போக்கிடக் 0035-3
காதல் மாதரும் காட்சியில் கண்ணினார் 0035-4

26. முன்னம் ஆங்கு அவன் மொய்ம் முகை நாள் மலர் 0036-1
என்னை ஆட்கொண்ட ஈசனுக்கு ஏய்வன 0036-2
பன் மலர் கொய்து செல்லப் பனிமலர் 0036-3
அன்னம் அன்னவரும் கொண்டு அகன்ற பின் 0036-4

27. ஆதி மூர்த்தி அவன் திறம் நோக்கியே 0037-1
மாதர் மேல் மனம் வைத்தனை தென் புவி 0037-2

மீது தோன்றி அம் மெல்லியலார் உடன் 0037-3
காதல் இன்பம் கலந்து அணைவாய் என 0037-4

28. கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கி நான் 0038-1
செய்ய சேவடி நீங்கும் சிறுமை யேன் 0038-2
மையல் மானுடமாய் மயங்கும் வழி 0038-3
ஐயனே தடுத்து ஆண்டு அருள் செய் என 0038-4

29. அம் கணாளன் அதற்கு அருள் செய்த பின் 0039-1
நங்கை மாருடன் நம்பி மற்று அத் திசை 0039-2
தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாறும் என்று 0039-3
அங்கு அவன் செயல் எல்லாம் அறைந்தனன் 0039-4

30. அந்தண் ஆளரும் ஆங்கு அது கேட்டவர் 0040-1
பந்த மானுடப் பால்படு தென்திசை 0040-2
இந்த வான் திசை எட்டினும் மேல் பட 0040-3
வந்த புண்ணியம் யாது என மாதவன் 0040-4

31. பெரு அருந் தவத்தான் புலிக் காலனாம் 0041-1
அரு முனி எந்தை அர்ச்சித்தும் உள்ளது 0041-2
பெருமை சேர் பெரும் பற்றப் புலியூர் என்று 0041-3
ஒருமை யாளர் வைப்பாம் பதி ஓங்கும் ஆல் 0041-4

32. அத் திருப்பதியில் நமை ஆளுடை 0042-1
மெய்த் தவக்கொடி காண விருப்புடன் 0042-2
அத்தன் நீடிய அம்பலத்து ஆடும் மற்று 0042-3
இத் திறம் பெறலாம் திசை எத்திசை 0042-4

33. பூதம் யாவையின் உள்ளலர் போது என 0043-1
வேத மூலம் வெளிப்படும் மேதினிக் 0043-2
காதல் மங்கை இதய கமலமாம் 0043-3
மாது ஒர் பாகனார் ஆரூர் மலர்ந்தது ஆல் 0043-4

34. எம் பிராட்டி இவ் ஏழுலகு ஈன்றவள் 0044-1
தம் பிரானைத் தனித் தவத்தால் எய்திக் 0044-2
கம்பை ஆற்றில் வழிபடு காஞ்சி என்று 0044-3
உம்பர் போற்றும் பதியும் உடையது 0044-4

35. நங்கள் நாதனாம் நந்தி தவம் செய்து 0045-1
பொங்கு நீடு அருள் எய்திய பொற்பது 0045-2
கங்கை வேணி மலரக் கனல் மலர் 0045-3
செங்கை யாளர் ஐயாறும் திகழ்வது 0045-4

36. தேசம் எல்லாம் விளக்கிய தென் திசை 0046-1
ஈசர் தோணி புரத்துடன் எங்கணும் 0046-2
பூசனைக்குப் பொருந்தும் இடம் பல 0046-3
பேசில் அத்திசை ஒவ்வா பிறதிசை 0046-4

37. என்று மாமுனி வன் தொண்டர் செய்கையை 0047-1
அன்று சொன்ன படியால் அடியவர் 0047-2
தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகை விரி 0047-3
இன்று என் ஆதரவால் இங்கு இயம்புகேன் 0047-4

38. மற்று இதற்குப் பதிகம் வன் தொண்டர் தாம் 0048-1
புற்று இடத்து எம் புராணர் அருளினால் 0048-2
சொற்ற மெய்த் திருத்தொண்டத்தொகை எனப் 0048-3
பெற்ற நற்பதிகம் தொழப் பெற்றதாம் 0048-4

39. அந்த மெய்ப் பதிகத்து அடியார்களை 0049-1
நம்தம் நாதனாம் நம்பியாண் டார் நம்பி 0049-2
புந்தி ஆரப் புகன்ற வகையினால் 0049-3
வந்த வாறு வழாமல் இயம்புவாம் 0049-4

40. உலகம் உய்யவும் சைவம் நின்று ஓங்கவும் 0050-1
அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய 0050-2
நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்து உறை 0050-3
குலவு தண்புனல் நாட்டு அணி கூறுவாம் 0050-4

2 திரு நாட்டுச் சிறப்பு

1. பாட்டு இயல் தமிழ் உரை பயின்ற எல்லையுள் 0051-1
கோட்டு உயர் பனிவரைக் குன்றின் உச்சியில் 0051-2
சூட்டிய வளர் புலிச் சோழர் காவிரி 0051-3
நாட்டு இயல்பு அதனை யான் நவிலல் உற்றனன் 0051-4

2. ஆதி மாதவ முனி அகத்தியன் தரு 0052-1
பூத நீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி 0052-2
மாதர் மண் மடந்தை பொன் மார்பில் தாழ்ந்தது ஓர் 0052-3
ஓத நீர் நித்திலத்து தாமம் ஒக்கும் ஆல் 0052-4

3. சைய மால் வரை பயில் தலைமை சான்றது 0053-1
செய்ய பூ மகட்கு நற் செவிலி போன்றது 0053-2
வையகம் பல் உயிர் வளர்த்து நாள் தொறும் 0053-3
உய்யவே சுரந்து அளித்து ஊட்டும் நீரது 0053-4

4. மாலின் உந்திச் சுழி மலர் தன் மேல் வரும் 0054-1
சால்பினால் பல் உயிர் தரும் தன் மாண்பினால் 0054-2
கோல நற் குண்டிகை தாங்கும் கொள்கையால் 0054-3
போலும் நான் முகனையும் பொன்னி மாநதி 0054-4

5. திங்கள் சூடிய முடிச் சிகரத்து உச்சியில் 0055-1
பொங்கு வெண் தலை நுரை பொருது போதலால் 0055-2
எங்கள் நாயகன் முடி மிசை நின்றே இழி 0055-3
கங்கை ஆம் பொன்னி ஆம் கன்னி நீத்தமே 0055-4

6. வண்ண நீள் வரை தர வந்த மேன்மையால் 0056-1
எண்ணில் பேர் அறங்களும் வளர்க்கும் ஈகையால் 0056-2
அண்ணல் பாகத்தை ஆளுடைய நாயகி 0056-3
உள் நெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது 0056-4

7. வம்புலாம் மலர் நீரால் வழிபட்டுச் 0057-1
செம் பொன் வார் கரை எண்ணில் சிவ ஆலயத்து 0057-2
எம் பிரானை இறைஞ்சலின் ஈரம் பொன்னி 0057-3
உம்பர் நாயகர்க்கு அன்பரும் ஒக்கும் ஆல் 0057-4

8. வாசநீர் குடை மங்கையர் கொங்கையில் 0058-1
பூசும் குங்குமமும் புனை சாந்தமும் 0058-2
வீசு தெண் திரை மீது இழந்து ஓடும் நீர் 0058-3
தேசு உடைத்து எனினும் தெளிவு இல்லதே 0058-4

9. மா விரைத்து எழுந்து ஆர்ப்ப வரை தரு 0059-1
பூ விரித்த புது மதுப் பொங்கிட 0059-2
வாவியிற் பொலி நாடு வளம் தரக் 0059-3
காவிரிப் புனல் கால் பரந்து ஓங்கும் ஆல் 0059-4

10. ஒண் துறைத் தலை மா மத கூடு போய் 0060-1

மாண்டு நீர் வயலுள் புக வந்தெதிர்      0060-2
கொண்ட மள்ளர் குரைத்த கை ஓசை போய்      0060-3
அண்டர் வானத்தின் அப் புறம் சாரும் ஆல்      0060-4

11. மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்     0061-1
சீத நீர் முடி சேர்ப்பவர் செய்கையும்   0061-2
ஒதையார் செய் உழுநர் ஒழுக்கமும்    0061-3
காதல் செய்வது ஓர் காட்சி மலிந்ததே      0061-4

12. உழுத சால் மிக ஊறித் தெளிந்த சேறு      0062-1
இழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்      0062-2
தொழுது நாறு நடுவார் தொகுதியே     0062-3
பழுதில் காவிரி நாட்டின் பரப்பு எலாம்      0062-4

13. மண்டு புனல் பரந்த வயல் வளர் முதலின் சுருள் விரியக்      0063-1
கண்டு உழவர் பதங் காட்டக் களைகளையும் கடைசியர்கள்      0063-2
தண் தரளம் சொரி பணிலம் இடறி இடை தளர்ந்து அசைவார்      0063-3
வண்டு அலையும் குழல் அலைய மட நடையின் வரம்பு அணைவார்   0063-4

14. செங்குவளை பறித்து அணிவார் கருங் குழல்மேல் சிறை வண்டை      0064-1
அங்கை மலர்களைக் கொடுகைத்து அயல் வண்டும் வரவழைப்பார்   0064-2
திங்கள் நுதல் வெயர் அரும்பச் சிறுமுறுவல் தள வரும்பப் 0064-3
பொங்கு மலர்க் கமலத்தின் புது மதுவாய் மடுத்து அயர்வார்      0064-4

15. கரும்பல்ல நெல் என்னக் கமுகு அல்ல கரும்பு என்னச்      0065-1
சுரும்பு அல்லி குடைநீலத் துகள் அல்ல பகல் எல்லாம்    0065-2
அரும்பு அல்ல முலையென்ன அமுது அல்ல மொழி என்ன      0065-3
வரும் பல்லாயிரம் கடைசி மடந்தையர்கள் வயல் எல்லாம்      0065-4

16. கயல் பாய் பைந் தட நந்து ஊன் கழிந்த கருங்குழிசி    0066-1
வியல்வாய் வெள் வளைத் தரள மலர்வேரி உலைப்பெய்து அங்கு      0066-2
அயலாமை அடுப்பு ஏற்றி அரக்கு ஆம்பல் நெருப்பு ஊதும்      0066-3
வயல் மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பு எல்லாம்     0066-4

17. காடு எல்லாம் கழைக் கரும்பு கா எல்லாம் குழைக் கரும்பு      0067-1
மாடு எல்லாம் கருங் குவளை வயல் எல்லாம் நெருங்குவளை      0067-2
கோடு எல்லாம் மட அன்னம் குளம் எல்லாம் கடல் அன்ன      0067-3
நாடு எல்லாம் நீர் நாடு தனை ஒவ்வா நலம் எல்லாம்      0067-4

18. ஆலை பாய்பவர் ஆர்ப்பு உறும் ஒலமும்      0068-1
சோலை வாய் வண்டு இரைத்து எழு சும்மையும்  0068-2
ஞாலம் ஓங்கிய நான் மறை ஓதையும்  0068-3
வேலை ஓசையின் மிக்கு விரவும் ஆல்      0068-4

19. அன்னம் ஆடும் அகன் துறைப் பொய்கையில்      0069-1
துன்னும் மேதி படியத் துதைந்து எழும்      0069-2
கன்னி வாளை கமுகின் மேல் பாய்வன      0069-3
மன்னு வான் மிசை வானவில் போலும் ஆல்      0069-4

20. காவினிற் பயிலும் களி வண்டு இனம்      0070-1
வாவியிற் படிந்து உண்ணும் மலர் மது  0070-2
மேவி அத்தடம் மீது எழப் பாய் கயல்  0070-3
தாவி அப்பொழிலில் கனி சாடுமால்     0070-4

21. சாலி நீள் வயலின் ஓங்கித் தந்நிகர் இன்றி மிக்கு      0071-1
வாலி தாம் வெண்மை உண்மைக் கருவின் ஆம் வளத்தவாகிச்      0071-2
சூல் முதிர் பசலை கொண்டு சுருல் விரித்தானுக்கு அன்பர்      0071-3
ஆல் இன சிந்தை போல அலர்ந்தன கதிர்கள் எல்லாம்     0071-4

22. பத்தியின் பாலர் ஆகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர் 0072-1
தத்தமிற் கூடினார்கள் தலையினால் வணங்கு மாபோல் 0072-2
மொய்த்த நீள் பத்தியின்பால் முதிர்தலை வணங்கி மற்றை 0072-3
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம் 0072-4

23. அரிதரு செந்நெல் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார் 0073-1
பரிவுறத் தடிந்த பன்மீன் படர் நெடும் குன்று செய்வார் 0073-2
சுரிவளை சொரிந்த முத்தின் சுடரப் பெரும் பெருப்பு அர்ப்பர் 0073-3
வரிமலர் கற்றை வேரி பொழிந்து இழி வெற்பு வைப்பர் 0073-4

24. சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக் 0074-1
கால் இரும் பகடு போக்கும் கரும் பெரும் பாண்டில் ஈட்டம் 0074-2
ஆலிய முகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல் 0074-3
மேல் வலம் கொண்டு சூழும் காட்சியின் மிக்கது அன்றே 0074-4

25. வை தெரிந்து அகற்றி மழைப் பெயல் மானத் தூற்றிச் 0075-1
செய்ய பொற் குன்றும் வேறு நவமனிச் சிலம்பும் என்னக் 0075-2
கைவினை மள்ளர் வானங் கரக்க ஆக்கிய நெல் குன்று ஆல் 0075-3
மொய் வரை உலகம் போலும் முளரி நீர் மருத வைப்பு 0075-4

26. அரசு கொள் கடன்கள் ஆற்றி மிகுதிகொண்டு அறங்கள் பேணிப் 0076-1
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின் 0076-2
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி 0076-3
வரை புரை மாடம் நீடி மல்ர்ந்துள பதிகள் எங்கும் 0076-4

27. கரும்பு அடு களமர் ஆலைக் கமழ் நறும் புகையோ மாதர் 0077-1
சுரும்பு எழ அகிலால் இட்ட தூபமோ யூப வேள்விப் 0077-2
பெரும் பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின் 0077-3
வரும் கரு முகிலோ சூழ்வ மாடமும் காவும் எங்கும் 0077-4

28. நாளி கேர் அஞ்ச் செருந்தி நறுமலர் நரந்தம் எங்கும் 0078-1
கோளிசால் அந்த மாலங் குளிர் மலர்க் குரவம் எங்கும் 0078-2
தாள் இரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும் 0078-3
நீள் இலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும் 0078-4

29. சூத பாடலங்கள் எங்கும் சூழ் வழை ஞாழல் எங்கும் 0079-1
சாதி மாலதிகள் எங்கும் தண்தளிர் நறவம் எங்கும் 0079-2
மாதவி சரளம் எங்கும் வகுள சண்பங்கள் எங்கும் 0079-3
போது அவிழ் கைதை எங்கும் பூக புன்னாகம் எங்கும் 0079-4

30. மங்கல வினைகள் எங்கும் மணம் செய் கம்பலைகள் எங்கும் 0080-1
பங்கய வதனம் எங்கும் பண்களின் மழலை எங்கும் 0080-2
பொங்கு ஒளிக் கலன்கள் எங்கும் புது மலர்ப் பந்தர் எங்கும் 0080-3
செம் கயல் பழனம் எங்கும் திருமகள் உறையுள் எங்கும் 0080-4

31. மேகமும் களிறும் எங்கும் வேதமும் கிடையும் எங்கும் 0081-1
யாகமும் சடங்கும் எங்கும் இன்பமும் மகிழ்வும் எங்கும் 0081-2
யோகமும் தவமும் எங்கும் ஊலும் மறுகும் எங்கும் 0081-3
போகமும் பொலிவும் எங்கும் புண்ணிய முனிவர் எங்கும் 0081-4

32. பண்டு அரு விபஞ்சி எங்கும் பாத செம் பஞ்சி எங்கும் 0082-1
வண்டு அறை குழல்கள் எங்கும் வளர் இசைக் குழல்கள் எங்கும் 0082-2
தொண்டர் தம் இருக்கை எங்கும் சொல்லுவ திருக்கை எங்கும் 0082-3
தண்டு அலை பலவும் எங்கும் தாதகி பலவும் எங்கும் 0082-4

33. மாடு போதகங்கள் எங்கும் வண்டு போதகங்கள் எங்கும் 0083-1
பாடும் அம் மனைகள் எங்கும் பயிலும் அம் மனைகள் எங்கும் 0083-2

நீடு கேதனங்கள் எங்கும் நிதி நிகேதனங்கள் எங்கும் 0083-3
தோடு சூழ் மாலை எங்கும் துணைவர் சூழ் மாலை எங்கும் 0083-4

34. வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும் 0084-1
சாதிகள் நெறியில் தப்பார் தனயரும் மனையில் தப்பார் 0084-2
நீதிய புள்ளும் மாவும் நிலத்து இருப் புள்ளும் மாவும் 0084-3
ஓதிய எழுத்து ஆம் அஞ்சும் உறுபிணி வரத் தாம் அஞ்சும் 0084-4

35. நற்றமிழ் வரைப்பின் ஓங்கு நாம் புகழ் திருநாடு என்றும் 0085-1
பொற் தடந் தோளால் வையம் பொதுக் கடிந்து இனிது காக்கும் 0085-2
கொற்றவன் அநபாயன் பொன் குடை நிழல் குளிர்வது என்றால் 0085-3
மற்று அதன் பெருமை நம்மால் வரம்பு உற விளம்பல் ஆமோ 0085-4

3 திருநகரச் சிறப்பு
1. சொன்ன நாட்டு இடைத் தொன்மையில் மிக்கது 0086-1
மன்னு மா மலராள் வழி பட்டது 0086-2
வன்னி ஆறு மதி பொதி செம் சடைச் 0086-3
சென்னியார் திருவாரூர்த் திருநகர் 0086-4

2. வேத ஓசையும் வீணையின் ஓசையும் 0087-1
சோதி வானவர் தோத்திர ஓசையும் 0087-2
மாதர் ஆடல் பாடல் மணி முழவு ஓசையும் 0087-3
கீத ஓசையும் மாய்க் கிளர்வு உற்றவே 0087-4

3. பல் இயங்கள் பரந்த ஒலியுடன் 0088-1
செல்வ வீதிச் செழு மணித் தேர் ஒலி 0088-2
மல்லல் யானை ஒலியுடன் மா ஒலி 0088-3
எல்லை இன்றி எழுந்துள எங்கணும் 0088-4

4. மாட மாளிகை சூளிகை மண்டபம் 0089-1
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள் 0089-2
நீடு சாளர நீடு அரங்கு எங்கெணும் 0089-3
ஆடல் மாதர் அணி சிலம்பு ஆர்ப்பன 0089-4

5. அங்கு உரைக்கென்ன அளவப் பதி இலார் 0090-1
தங்கள் மாளிகையின் ஒன்று சம்புவின் 0090-2
பங்கினாள் திருச் சேடி பரவை ஆம் 0090-3
மங்கையார் அவதாரம் செய் மாளிகை 0090-4

6. படர்ந்த பேர் ஒளிப் பன் மணி வீதிபார் 0091-1
இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார் 0091-2
தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூது போய் 0091-3
நடந்த செம் தாமரை அடி நாறும் ஆல் 0091-4

7. செம் கண் மாதர் தெருவில் தெளித்த செம் 0092-1
குங்குமத்தின் குழம்பை அவர் குழல் 0092-2
பொங்கு கோதையில் பூந் துகள் வீழ்ந்து உடன் 0092-3
அம்கண் மேவி அளறு புலர்த்தும் ஆல் 0092-4

8. உள்ளம் ஆர் உருகாதவர் ஊர் விடை 0093-1
வள்ளல் ஆர் திருவாரூர் மருங்கு எலாம் 0093-2
தெள்ளும் ஓசைத் திருப் பதிகங்கள் பைம் 0093-3
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள் 0093-4

9. விளக்கம் மிக்க கலன்கள் விரவலால் 0094-1
துளக்கு இல் பேர் ஒலியால் துன்னும் மாடங்கள் 0094-2
வளத் தொடும் பலவாறு மடுத்தலால் 0094-3

அளக்கர் போன்றன ஆவண வீதிகள் 0094-4

10. ஆரங்களே அல்ல மறுகு இடை 0095-1
வாரங்களும் மாறி முழங்கும் ஆல் 0095-2
சீர் அணங்கிய தேவர்களே அலால் 0095-3
தோரணங்களில் தாமமும் சூழும் ஆல் 0095-4

11. தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர் 0096-1
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர் 0096-2
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார் 0096-3
சூழ்ந்த பல் வேறு இடத்தது அத் தொல் நகர் 0096-4

12. நில மகட்கு அழகு ஆர் திரு நீள் நுதல் 0097-1
திலகம் ஒப்பது செம்பியர் வாழ் பதி 0097-2
மலர் மகட்கு வண் தாமரை போல் மலர்ந்து 0097-3
அலகில் சீர்த் திருவாரூர் விளங்கும் ஆல் 0097-4

13. அன்ன தொல் நகருக்கு அரசு ஆயினான் 0098-1
துன்னு செம் கதிரோன் வழித் தோன்றினான் 0098-2
மன்னு சீர் அநபாயன் வழி முதல் 0098-3
மின்னும் மா மணிப் பூண் மனு வேந்தனே 0098-4

14. மண்ணில் வாழ் தரு மன் உயிர்கட்கு எல்லாம் 0099-1
கண்ணும் ஆவியும் ஆம் பெரும் காவலான் 0099-2
விண் உளார் மகிழ்வு எய்திட வேள்விகள் 0099-3
எண் இலாதன் மாண இயற்றினான் 0099-4

15. கொற்ற ஆழி குவலயம் சூழ்ந்திடச் 0100-1
சுற்று மன்னர் திறை கடை சூழ்ந்திடச் 0100-2
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம் மனுப் 0100-3
பெற்ற நீதியும் தன் பெயர் ஆக்கினான் 0100-4

16. பொங்கு மா மறைப் புற்று இடம் கொண்டவர் 0101-1
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்கு 0101-2
அம் கண் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்து உளான் 0101-3
துங்க ஆகமம் சொன்ன முறைமை ஆல் 0101-4

17. அறம் பொருள் இன்பம் ஆன அறம் நெறி வழாமல் புல்லி 0102-1
மறம் கடிந்து அரசர் போற்ற வையகம் காக்கும் நாளில் 0102-2
சிறந்த நல் தவத்தால் தேவி திரு மணி வயிற்றின் மைந்தன் 0102-3
பிறந்தனன் உலகம் போற்றப் பேர் அரிக் குருளை அன்னான் 0102-4

18. தவம் முயன்று அரிதில் பெற்ற தனி இளங் குமரன் நாளும் 0103-1
சிவ முயன்று அடையும் தெய்வக் கலை பல திருந்த ஓதிக் 0103-2
கவனம் ஆம் புரவி யானை தேர் படைத் தொழில்கள் கற்றுப் 0103-3
பவ முயன்று அதுவும் பேறே எனவரும் பண்பின் மிக்கான் 0103-4

19. அளவில் தொல் கலைகள் முற்றி அரும் பெறல் தந்தை மிக்க 0104-1
உளம் மகிழ் காதல் கூர ஓங்கிய குணத்தால் நீடி 0104-2
இளவரசு என்னும் தன்மை எய்துதற்கு அணியன் ஆகி 0104-3
வளர் இளம் பரிதி போன்று வாழும் நாள் ஒருநாள் மைந்தன் 0104-4

20. திங்கள் வெண் கவிகை மன்னன் திரு வளர் கோயில் நின்று 0105-1
மங்குல் தோய் மாடம் வீதி மன் இளங் குமரர் சூழ 0105-2
கொங்கு அலர் மாலை தாழ்ந்த குங்குமம் குலவு தோளான் 0105-3
பொங்கிய தானை சூழ்த் தேர் மிசைப் பொலிந்து போந்தான் 0105-4

21. பரசு வந்தியர் முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர் 0106-1

விரை நறுங் குழலார் சிந்தும் வெள் வளை ஒருபால் மிக்க 0106-2
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கு ஒலி ஒருபால் வென்றி 0106-3
அரசு இளங் குமரன் போதும் அணி மணி மாட வீதி 0106-4

22. தனிப் பெருந் தருமம் தான் ஓர் தயா இன்றித் தானை மன்னன் 0107-1
பனிப்பு இல் சிந்தையினில் உண்மை பான்மை சோதித்தால் என்ன 0107-2
மனித்தர் தன் வரவு காணா வண்ணம் ஓர் வண்ணம் நல் ஆன் 0107-3
புனிற்று இளம் கன்று துள்ளிப் போந்தது அம் மறுகின் ஊடே 0107-4

23. அம்புனிற்று ஆவின் கன்று ஓர் அபாயத்தின் ஊடு போகிச் 0108-1
செம் பொனின் தேர்க்கால் மீது விசையினால் செல்லப் பட்டே 0108-2
உம்பரின் அடையக் கண்டு அங்கு உருகுதாய் அலமந்து ஓடி 0108-3
வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந் நடுக்குற்று வீழும் 0108-4

24. மற்று அது கண்டு மைந்தன் வந்தது இங்கு அபாயம் என்று 0109-1
சொல் தடுமாறி நெஞ்சில் துயர் உழந்து அறிவு அழிந்து 0109-2
பெற்றமும் கன்றும் இன்று என் உணர்வு எனும் பெருமை மாளச் 0109-3
செற்ற என் செய்கேன் என்று தேரின் இன்று இழிந்து வீழ்ந்தான் 0109-4

25. அலறு பேர் ஆவை நோக்கி ஆர் உயிர் பதைத்துச் சோரும் 0110-1
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிது உயிர்த்து இரங்கி நிற்கும் 0110-2
மலர் தலை உலகம் காக்கும் மனுவெனும் என் கோமானுக்கு 0110-3
உலகில் இப் பழி வந்து எய்தப் பிறந்தவா ஒருவன் என்பான் 0110-4

26. வந்த இப் பழியை மாற்றும் வகையினை மறை நூல் வாய்மை 0111-1
அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமே ஆகில் 0111-2
எந்தை ஈது அறியா முன்னம் இயற்றுவன் என்று மைந்தன் 0111-3
சிந்தை வெம் துயரம் தீர்ப்பான்திரு மறையவர் முன் சென்றான் 0111-4

27. தனுயிர்க் கன்று வீயத் தளர்ந்த ஆ தரியாது ஆகி 0112-1
முன் நெருப்பு உயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார 0112-2
மன் உயிர் காக்கும் செம்கோல் மனுவின் பொன் கோயில் வாயில் 0112-3
பொன் அணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்தது அன்றே 0112-4

28. பழிப்பறை முழக்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ வேந்தன் 0113-1
வழித் திரு மைந்தன் ஆவி கொள வரும் மறலி ஊர்திக் 0113-2
கழுத்து அணி மணியின் ஆர்ப்போ என்னத் தன் கடைமுன் கோளாத் 0113-3
தெழித்து எழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்க போது 0113-4

29. ஆங்கு அது கேட்ட வேந்தன் அரி அணை இழிந்து போந்து 0114-1
பூம் கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி 0114-2
ஈங்கு இதோ ஓர் பசு வந்து எய்தி இறைவ நின் கொற்ற வாயில் 0114-3
தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கியது என்று சொன்னார் 0114-4

30. மன்னவன் அதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி 0115-1
என் இதற்கு உற்றது என்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்கா 0115-2
முன் உற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித் 0115-3
தொல் நெறி அமைச்சன் மன்னன் தாள் இணை தொழுது சொல்வான் 0115-4

31. வளவ நின் புதல்வன் ஆங்கு ஓர் மணி நெடுந் தேர்மேல் ஏறி 0116-1
அளவில் தேர்த் தானை சூழ அரசு உலாந் தெருவில் போங்கால் 0116-2
இளைய ஆன் கன்று தேர்க்கால் இடைப் புகுந்து இறந்தது ஆக 0116-3
தளர் உறும் இத் தாய் வந்து விளைத்தது இத் தன்மை என்றான் 0116-4

32. அவ்வுரை கேட்ட வேந்தன் ஆ உறு துயரம் எய்தி 0117-1
வெவ் விடம் தலைக் கொண்டாற் போல் வேதனை அகத்து மிக்கு இங்கு 0117-2
இவ் வினை விளைந்தவாறு என்று இடர் உறும் இரங்கும் ஏங்கும் 0117-3
செவ்விது என் செங்கோல் என்னும் தெருமரும் தெளியும் தேறான் 0117-4

33. மன் உயிர் புரந்து வையம் பொதுக் கடிந்து அறத்தில் நீடும் 0118-1
என் நெறி நன்று ஆல் என்னும் என்செய்தால் தீரும் என்னும் 0118-2
தன் இளம் கன்று காணாத் தாய் முகம் கண்டு சோரும் 0118-3
அந் நிலை அரசன் உற்ற துயரம் ஓர் அளவிற்று அன்று ஆல் 0118-4

34. மந்திரிகள் அது கண்டு மன்னவனை அடி வணங்கிச் 0119-1
சிந்தை தளர்ந்து அருளுவது மற்று இதற்கு தீர்வு அன்றால் 0119-2
கொந்து அலர்த் தார் மைந்தனை முன் கோ வதை செய்தார்க்கு மறை 0119-3
அந்தணர்கள் விதித்த முறை வழி நிறுத்தல் அறம் என்றார் 0119-4

35. வழக்கு என்று நீர் மொழிந்தால் மற்று அது தான் வலிப்பட்டு 0120-1
குழக்கன்றை இழந்து அலறும் கோ உறு நோய் மருந்தாமோ 0120-2
இழக்கின்றேன் மைந்தனை என்று எல்லீரும் சொல்லிய இச் 0120-3
சழக்கு இன்று நான் இசைந்தால் தருமம் தான் சலியாதோ 0120-4

36. மா நிலம் காவலன் ஆவான் மன் உயிர் காக்கும் காலைத் 0121-1
தான் தனக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால் 0121-2
ஊன மிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர் தம்மால் 0121-3
ஆன பயம் ஐந்தும் தீர்த்து அறம் காப்பான் அல்லன் ஓ 0121-4

37. என் மகன் செய் பாதகத்துக்கு இருந்தவங்கள் செய இசைந்தே 0122-1
அன்னியன் ஓர் உயிர் கொன்றால் அவனைக் கொல்வேன் ஆனால் 0122-2
தொன் மனு நூல் தொடை மனுவால் துடைப்பு உண்டது எனும் வார்த்தை 0122-3
மன்னுலகில் பெற மொழிந்தீர் மந்திரிகள் வழக்கு என்றான் 0122-4

38. என்று அரசன் இகழ்து உரைப்ப எதிர் நின்ற மதி அமைச்சர் 0123-1
நின்ற நெறி உலகின் கண் இது போல் முன் நிகழ்ந்தது ஆல் 0123-2
பொன்று வித்தல் மரபு அன்று மறை மொழிந்த அறம் புரிதல் 0123-3
தொன்று தொடு நெறி யன்றோ தொல் நிலம் காவல என்றார் 0123-4

39. அவ் வண்ணம் தொழுது உரைத்த அமைச்சர்களை முகம் நோக்கி 0124-1
மெய் வண்ணம் தெரிந்து உணர்ந்த மனு வென்னும் விறல் வேந்தன் 0124-2
இவ் வண்ணம் பழுது உரைத்தீர் என்று எரியின் இடைத் தோய்ந்த 0124-3
செவ் வண்ணக் கமலம் போல் முகம் புலந்து செயிர்த்து உரைப்பான் 0124-4

40. அவ்வுரையில் வரு நெறிகள் அவை நிற்க அறநெறியின் 0125-1
செவ்விய உண்மைத் திறம் நீர் சிந்தை செயாது உரைக்கின்றீர் 0125-2
எவ் உலகில் எப் பெற்றம் இப் பெற்றித் தாம் இடரால் 0125-3
வெவ் உயிர்த்துக் கதறி மணி எறிந்து விழுந்தது விளம்பீர் 0125-4

41. போற்றி இசைத்துப் புரந்தரன் மால் அயன் முதலோர் புகழ்ந்து இறைஞ்ச 0126-1
வீற்று இருந்த பெருமானார் மேவி வுறை திருவாரூர்த் 0126-2
தோற்றம் உடை உயிர் கொன்றான் ஆதலினால் துணி பொருள் தான் 0126-3
ஆற்றவும் மற்று அவற் கொல்லும் அதுவேயாம் என நினைமின் 0126-4

42. என மொழிந்து மற்று இதனுக்கு இனி இதுவே செயல் இவ் ஆன் 0127-1
மனம் அழியும் துயர் அகற்ற மாட்டாதேன் வருந்தும் இது 0127-2
தனது உறு பேர் இடர் யானும் தாங்குவதே கருமம் என 0127-3
அனகன் அரும் பொருள் துணிந்தான் அமைச்சரும் அஞ்சினர் அகன்றார் 0127-4

43. மன்னவன் தன் மைந்தனை அங்கு அழைத்து ஒரு மந்திரி தன்னை 0128-1
முன் இவனை அவ்வீதி முரண் தேர்க்கால் ஊர்க என 0128-2
அன்னவனும் அது செய்யாது அகன்று தன் ஆருயிர் துறப்பத் 0128-3
தன்னுடைய குல மகனைத் தான் கொண்டு மறுங்கு அணைந்தான் 0128-4

44. ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான் 0129-1
தருமம் தன் வழிச்செல்கை கடன் என்று தன் மைந்தன் 0129-2

மருமம் தன் தேர் ஆழி உற ஊர்ந்தான் மனு வேந்தன் 0129-3
அருமந்த அரசாட்சி அரிதோ மற்று எளிதோ தான் 0129-4

45. தண் அளி வெண் குடை வேந்தன் செயல் கண்டு தரியாது 0130-1
மண்ணவர் கண் மழை பொழிந்தார் வானவர் பூ மழை சொரிந்தார் 0130-2
அண்ணல் அவன் கண் எதிரே அணி வீதி மழ விடை மேல் 0130-3
விண்ணவர்கள் தொழ நின்றான் வீதி விடங்கப் பெருமான் 0130-4

46. சடை மருங்கில் இளம் பிறையும் தனி விழிக்குந் திருநுதலும் 0131-1
இடம் மருங்கில் உமையாளும் எம் மருங்கும் பூதகணம் 0131-2
புடை நெருங்கும் பெருமையும் முன் கண்டு அரசன் போற்றி இசைப்ப 0131-3
விடை மருவும் பெருமானும் விறல் வேந்தற்கு அருள் கொடுத்தான் 0131-4

47. அந் நிலையே உயிர் பிரிந்த ஆன் கன்றும் அவ் அரசன் 0132-1
மன் உரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன் எழலும் 0132-2
இன்ன பரிசு ஆனான் என்று அறிந்திலன் வேந்தனும் யார்க்கும் 0132-3
முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ 0132-4

48. அடி பணிந்த திருமகனை ஆகம உற எடுத்து அணைத்து 0133-1
நெடிது மகிழ்ந்து அரும் துயரம் நீக்கினான் நிலி வேந்தன் 0133-2
மடி சுரந்து பொழி தீம் பால் வரும் கன்று மகிழ்ந்து உண்டு 0133-3
படி நனைய வரும் பசுவும் பருவரல் நீங்கியது அன்றே 0133-4

49. பொன் தயங்கு மதில் ஆரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான் 0134-1
வென்றி மனு வேந்தனுக்கு வீதியிலே அருள் கொடுத்து 0134-2
சென்று அருளும் பெரும் கருணைத் திறம் கண்டு தன் அடியார்க்கு 0134-3
என்றும் எளிவரும் பெருமை ஏழ் உலகும் எடுத்து ஏத்தும் 0134-4

50. இனைய வகை அற நெறியில் எண் இறந்தோர்க்கு அருள் புரிந்து 0135-1
முனைவர் அவர் மகிழ்ந்து அருளப் பெற்று உடைய மூதூர் மேல் 0135-2
புனையும் உரை நம் அளவில் புகலலாந் தகைமை அதோ 0135-3
அனைய தனுக்கு அக மலராம் அறவனார் பூம் கோயில் 0135-4

4 திருக்கூட்டச் சிறப்பு

1. பூத நாயகர் புற்று இடம் கொண்டவர் 0136-1
ஆதி தேவர் அமர்ந்த பூங் கோயிலிற் 0136-2
சோதி மா மணி நீள் சுடர் முன்றில் சூழ் 0136-3
மூது எயில் திரு வாயில் முன் ஆயது 0136-4

2. பூவார் திசை முகன் இந்திரன் பூ மிசை 0137-1
மா வாழ் அகலத்து மால் முதல் வானவர் 0137-2
ஓவாது எவரும் நிறைந்து உள்ளது 0137-3
தேவா சிரியன் எனுந் திருக் காவணம் 0137-4

3. அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல் 0138-1
நிரந்த நீற்று ஒளியால் நிறை தூய்மையால் 0138-2
புரந்த அஞ்சு எழுத்து ஓசை பொலிதலால் 0138-3
பரந்த ஆயிரம் பால் கடல் போல்வது 0138-4

4. அகில காரணர் தாள பணிவார்கள் தாம் 0139-1
அகில லோகமும் ஆளற்கு உரியர் என்று 0139-2
அகில லோகத்து உளார்கள் அடைதலின் 0139-3
அகில லோகமும் போல்வது அதன் இடை 0139-4

5. அத்தர் வேண்டி முன் ஆண்டவர் அன்பினால் 0140-1
மெய்த் தழைந்து விதிர்ப்புறு சிந்தையார் 0140-2
கைத் திருத் தொண்டு செய் கடப்பாட்டினார் 0140-3

இத்திறத்தவர் அன்றியும் எண் இலார் 0140-4

6. மாசு இலாத மணி திகழ் மேனி மேல் 0141-1
பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள் 0141-2
தேசினால் எத் திசையும் விளங்கினார் 0141-3
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார் 0141-4

7. பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும் 0142-1
மாது ஓர் பாகர் மலர்த்தாள் மறப்பு இலார் 0142-2
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார் 0142-3
கோது இலாத குணப் பெருங் குன்றனார் 0142-4

8. கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார் 0143-1
ஓடும் செம் பொனும் ஒக்கவே நோக்குவார் 0143-2
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி 0143-3
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் 0143-4

9. ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே 0144-1
பாரம் ஈசன் பணி அலாது ஒன்று இலார் 0144-2
ஈர அன்பினர் யாதும் குறைவு இலார் 0144-3
வீரம் என்னால் விளம்பும் தகையதோ 0144-4

10. வேண்டு மாறு விருப்பு உறும் வேடத்தர் 0145-1
தாண்ட அப் பெருமான் தனித் தொண்டர்கள் 0145-2
நீண்ட தொல் புகழ் ஆர் தம் நிலைமையை 0145-3
ஈண்டு வாழ்த்து கேன் என்ன அறிந்து ஏத்துகேன் 0145-4

11. இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான் 0146-1
அந்தம் இல் புகழ் ஆலால சுந்தரன் 0146-2
சுந்தரத் திருத் தொண்டத் தொகைத் தமிழ் 0146-3
வந்து பாடிய வண்ணம் உரை செய்வாம் 0146-4

5 தடுத்து ஆட்கொண்ட புராணம்

1. கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும் முடி மேல் வைத்த 0147-1
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு 0147-2
மங்கையர் வதன சீத மதி இருமருங்கும் ஓடிச் 0147-3
செம் கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு 0147-4

2. பெருகிய நலத்தால் மிக்க பெரும் திரு நாடு தன் இல் 0148-1
அரு மறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்த 0148-2
மருவிய தவத்து ஆல் மிக்க வளம் பதி வாய்மை குன்றாத் 0148-3
திரு மறையவர்கள் நீடும் திரு நாவலூர் ஆம் அன்றே 0148-4

3. மாது ஒரு பாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும் 0149-1
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்க்கு 0149-2
ஏதம் இல் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்பால் 0149-3
தீது அகன்று உலகம் உய்யத் திரு அவதாரம் செய்தார் 0149-4

4. தம்பிரான் அருளினாலே தவத்தினால் மிக்கோர் போற்றும் 0150-1
நம்பி ஆரூரர் என்றே நாமமும் சாற்றிமிக்க 0150-2
ஐம் படை சதங்கை அணிமணிச் சுட்டிச் சாத்தி 0150-3
செம் பொன் நாண் அரையில் மின்னத் தெருவில் தேர் உருட்டு நாளில் 0150-4

5. நர சிங்க முனையர் என்னும் நாடு வாழ் அரசர் கண்டு 0151-1
பர அருங் காதல் கூரப் பயந்தவர் தம்பால் சென்று 0151-2
விரவிய நண்பினால் ஏ வேண்டினர் பெற்றுத் தங்கள் 0151-3
அரசு இளம் குமரற்கு ஏற்ப அன்பினால் மகன்மை கொண்டார் 0151-4

6. பெருமை சால் காதல் பிள்ளையாய்ப் பின்னும் தங்கள் 0152-1
வரு முறை மரபில் வைகி வளர்ந்து மங்கலம் செய் கோலத்து 0152-2
அரு மறை முந் நூல் சாத்தி அளவு இல் தொல் கலைகள் ஆய்ந்து 0152-3
திரு மலி சிறப்பின் ஓங்கிச் சீர் மணப் பருவம் சேர்ந்தார் 0152-4

7. தந்தையார் சடையனார் தம் தனித் திரு மகற்குச் சைவ 0153-1
அந்தணர் குலத்து உள் தங்கள் அரும் பெரும் மரபுக்கு ஏற்ப 0153-2
வந்த தொல் சிறப்பில் புத்தூர்ச் சடங்கவி மறையோன் தன்பால் 0153-3
செந் திரு அனைய கன்னி மணத் திறம் செப்பி விட்டார் 0153-4

8. குல முதல் அறிவின் மிக்கோர் கோத்திர முறையும் தேர்ந்தார் 0154-1
நல மிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை ஏற்று 0154-2
மலர் தரு முகத்தன் ஆகி மணம் புரி செயலின் வாய்மை 0154-3
பலவுடன் பேசி ஒத்த பண்பின் ஆல் அன்பு நேர்ந்தான் 0154-4

9. மற்று அவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல் தன்னைப் 0155-1
பெற்றவர் தம் பால் சென்று சொன்ன பின் பெருகு சிந்தை 0155-2
உற்றது ஓர் மகிழ்ச்சி எய்தி மண வினை உவந்து சாற்றிக் 0155-3
கொற்றவர் திருவுக்கு ஏற்பக் குறித்து நாள் ஓலை விட்டார் 0155-4

10. மங்கலம் பொலியச் செய்த மண வினை ஓலை ஏந்தி 0156-1
அம் கயல் கண்ணினாரும் ஆடவர் பலரும் ஈண்டிக் 0156-2
கொங்கு அலர்ச் சோலை மூது ஊர் குறுகினார் எதிரே வந்து 0156-3
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து கொண்டார் 0156-4

11. மகிழ்ச்சி யால் மணம் மீக் கூறி மங்கல வினைகள் எல்லாம் 0157-1
புகழ்ச்சி யால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழிலர் ஆகி 0157-2
இகழ்ச்சி ஒன்றானும் இன்றி ஏந்து பூ மாலைப் பந்தர் 0157-3
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீள் முளை சாத்தினார்கள் 0157-4

12. மண வினைக்கு அமைந்த செய்கை மாதினைப் பயந்தார் செய்யத் 0158-1
துணர் மலர்க் கோதைத் தாமச் சுரும்பு அணை தோளினானைப் 0158-2
புணர் மணத் திருநாள் முன் நாள் பொருந்திய விதியினாலே 0158-3
பணை முரசு இயம்ப வாழ்த்தி பைம்ப் பொன் நாண் காப்புச் சேர்த்தார் 0158-4

13. மா மறை விதி வழாமல் மணத்துறைக் கடன்கள் ஆற்றித் 0159-1
தூ மறை மூதூர்க் கங்குல் மங்கலம் துன்றி ஆர்ப்பத் 0159-2
தே மரு தொடையல் மார்பன் திரு மணக் கோலம் காணக் 0159-3
கா முறு மனத்தான் போலக் கதிரவன் உதயம் செய்தான் 0159-4

14. காலை செய் வினைகள் முற்றிக் கணித நூல் புலவர் சொன்ன 0160-1
வேலை வந்து அணையும் முன்னர் விதி மணக்கோலம் கொள்வான் 0160-2
நூல் அசைந்து இலங்கு மார்பின் நுணங்கிய கேள்வி மேலோன் 0160-3
மாலையும் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான் 0160-4

15. வாச நெய் ஊட்டி மிக்க மலர் விரை அடுத்த தூ நீர்ப் 0161-1
பாசனத்து அமைந்த பாங்கர்ப் பருமணி பைம் பொன் திண் கால் 0161-2
ஆசனத்து அணி நீர் ஆட்டி அரிசனம் சாத்தி அன்பால் 0161-3
ஈசனுக்கு இனியான் மேனி எழில் பெற விளக்கினார்கள் 0161-4

16. அகில் விரைத் தூபம் ஏய்ந்த அணி கொள் பட்டு ஆடை சாத்தி 0162-1
முகில் நுழை மதியம் போலக் கை வலான் முன் கை சூழ்ந்த 0162-2
துகில் கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித் தன் தூய செம் கை 0162-3
உகிர் நுதி முறையில் போக்கி எழில் பெற விளக்கினார் கள் 0162-4

17. தூ நறும் பசும் கர்ப்பூரச் சுண்ணத்தால் வண்ணப் போது இல் 0163-1
ஆன தண் பனி நீர் கூட்டி அமைந்த சந்தனச் சேர் ஆட்டி 0163-2

மான் மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப் 0163-3
பான் முறை முந்நூல் மின்னப் பவித்திரம் சிறந்த கையான் 0163-4

18. தூ மலர்ப் பிணையல் மாலை துணர் இணர்க் கண்ணிக் கோதை 0164-1
தாமம் என்று இனைய வேறு தகுதியால் அமையச் சாத்தி 0164-2
மா மணி அணிந்த தூய வளர் ஒளி இருள் கால் சீக்கும் 0164-3
நாம நீள் கலன்கள் சாத்தி நன் மணக் கோலம் கொண்டான் 0164-4

19. மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க 0165-1
நன்நகர் விழவு கொள்ள நம்பி ஆரூரர் நாதன் 0165-2
தன் அடி மனத்துள் கொண்டு தகும் திரு நீறு சாத்திப் 0165-3
பொன் அணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார் 0165-4

20. இயம் பல துவைப்ப எங்கும் ஏத்து ஒலி எடுப்ப மாதர் 0166-1
நயந்து பல் ஆண்டு போற்ற நான் மறை ஒலியின் ஓங்க 0166-2
வியந்துபார் விரும்ப வந்து விரவினர்க்கு இன்பம் செய்தே 0166-3
உயர்ந்த வாகன யானங்கள் மிசை கொண்டார் உழையர் ஆனார் 0166-4

21. மங்கல கீத நாத மறையவர் குழங்கள் ஒடு 0167-1
தொங்கலும் விரையும் சூழ்ந்த மைந்தரும் துன்றிச் சூதும் 0167-2
பங்கய முகையும் சாயத்துப் பணைத்து எழும் தணியில் மிக்க 0167-3
குங்கும முலையினார் உம் பரந்து எழு கொள்கைத்து ஆகி 0167-4

22. அருங்கடி எழுந்த போழ்து இன் ஆர்த்த வெள் வளை களாலும் 0168-1
இருங் குழை மகரத் தாலும் இலங்கு ஒளி மணிகளாலும் 0168-2
நெருங்கிய பீலிச் சோலை நீல நீர்த் தரங்கத் தாலும் 0168-3
கரும் கடல் கிளர்ந்தது என்னக் காட்சியில் பொலிந்தது அன்றே 0168-4

23. நெருங்கு தூரியங்கள் ஏங்க நிரைத்த சாமரைகள் ஓங்கப் 0169-1
பெரும் குடை மிடைந்து செல்லப் பூம் கொடிகள் ஆட 0169-2
அரும் கடி மணம் வந்து எய்த அன்று தொட்டு என்றும் அன்பில் 0169-3
வரும் குல மறையோர் புத்தூர் மணம் வந்த புத்தூராம் ஆல் 0169-4

24. நிறை குடம் தூபம் தீபம் நெருங்கு பாலிகைகள் ஏந்தி 0170-1
நறை மலர் அறுகு சுண்ணம் நறும் பொரி பலவும் வீசி 0170-2
உறை மலி கலவை சாந்தின் உறுபுனல் தெளித்து வீதி 0170-3
மறையவர் மடவார் வள்ளல் மணம் எதிர் கொள்ள வந்தார் 0170-4

25. கண்கள் எண் இலாத வேண்டும் காளையைக் காண என்பார் 0171-1
பெண்களில் உயர நோன் தாள் சடங்கவி பேதை என்பார் 0171-2
மண் களி கூர வந்த மணம் கண்டு வாழ்ந்தோம் என்பார் 0171-3
பண்களில் நிறைந்த கீதம் பாடுவார் ஆடு வார் கள் 0171-4

26. ஆண் தகை அருளின் நோக்கின் வெள்ளத்துள் அலைந்தோம் என்பர் 0172-1
தாண்டிய பரியும் நம்பால் தகுதியின் நடந்தது என்பர் 0172-2
பூண்ட அங்கு இவனே காணும் முண்ணிய மூர்த்தி என்பர் 0172-3
ஈண்டிய மடவார் கூட்டம் இன் அன இசைப்பச் சென்றார் 0172-4

27. வரும் மணக் கோலத்து எங்கள் வள்ளல் ஆர் தெள்ளும் வாசத் 0173-1
திருமணப் பந்தர் முன்பு சென்று வெண் சங்கம் எங்கும் 0173-2
பெரு மழைக் குலத்தின் ஆர்ப்பப் பரி மிசை இழிந்து பேணும் 0173-3
ஒரு மணத் திறத்தின் அங்கு நிகழ்ந்தது மொழிவேன் உய்ந்தேன் 0173-4

28. ஆலும் மறை சூழ் கயிலையின் கண் அருள் செய்த 0174-1
சாலும் மொழியால் வழி தடுத்து அடிமை கொள்வான் 0174-2
மேல் உற எழுந்து மிகு கீழ் உற அகழ்ந்து 0174-3
மாலும் அயனுக்கும் அரியார் ஒருவர் வந்தார் 0174-4

29. கண் இடை கரந்த கதிர் வெண் படம் எனச் சூழ் 0175-1
புண்ணிய நுதல் புனித நீறு பொலிவு எய்தத் 0175-2
தண் மதி முதிர்ந்து கதிர் சாய்வது என மீதே 0175-3
வெண் நரை முடித்தது விழுந்து இடை சழங்க 0175-4

30. காதில் அணி கண்டிகை வடிந்த குழை தாழச் 0176-1
சோதி மணி மார்பின் அசை நூலின் ஒடு தோளின் 0176-2
மீது புனை உத்தரிய வெண் துகில் நுடங்க 0176-3
ஆதபம் மறைக் குடை அணிக் கரம் விளங்க 0176-4

31. பண்டி சரி கோவண உடைப் பழமை கூரக் 0177-1
கொண்டது ஓர் கழங்கல் உடை ஆர்ந்து அழகு கொள்ள 0177-2
வெண் துகிலுடன் குசை முடிந்து விடு வேணுத் 0177-3
தண்டு ஒரு கை கொண்டு கழல் தள்ளு நடை கொள்ள 0177-4

32. மொய்த்து வளர் பேர் அழகு மூத்த வடி வே யோ 0178-1
அத்தகைய மூப்பு எனும் அதன் படிவமே யோ 0178-2
மெய்த்த நெறி வைதிகம் விளைந்த முதலே யோ 0178-3
இத்தகைய வேடம் என ஐயம் உற எய்தி 0178-4

33. வந்து திரு மா மறை மணத் தொழில் தொடங்கும் 0179-1
பந்தர் இடை நம்பி எதிர் பன்னு சபை முன் நின்று 0179-2
இந்த மொழி கேண் மின் எதிர் யாவர்களும் என்றான் 0179-3
முந்தை மறை ஆயிரம் மொழிந்த திரு வாயான் 0179-4

34. என்று உரை செய் அந்தணனை எண்ணில் மறை யோரும் 0180-1
மன்றல் வினை மங்கல மடங்கல் அனை யானும் 0180-2
நன்று உமது நல்வரவு நங்கள் தவம் என்று ஏ 0180-3
நின்றது இவண் நீர் மொழி மின் நீர் மொழிவது என்றார் 0180-4

35. பிஞ்ஞகனும் நாவலர் பெருந் தகையை நோக்கி 0181-1
என் இடையும் நின் இடையும் நின்ற இசைவல் யான் 0181-2
முன் உடையது ஓர் பெரு வழக்கினை முடித்தே 0181-3
நின் உடைய வேள்வியினை நீ முயல்தி என்றான் 0181-4

36. நெற்றி விழியான் மொழிய நின்ற நிகர் இல்லான் 0182-1
உற்றது ஓர் வழக்கு என் இடை நீ உடையது உண்டேல் 0182-2
மற்ற அது முடித்தல் அலது யான் வதுவை செய்யேன் 0182-3
முற்ற இது சொல்லுக என எல்லை முடிவு இல்லான் 0182-4

37.  ஆவது இது கேண் மின் மறையோர் என் அடியான் இந் 0183-1
நாவல் நகர் ஊரன் இது நான் மொழிவது என்றான் 0183-2
தேவரையும் மால் அயன் முதல் திருவின் மிக்கோர் 0183-3
யாவரையும் வேறு அடிமை யாவும் உடைய எம்மான் 0183-4

38. என்றான் இறையோன் அது கேட்டவர் எம் மருங்கும் 0184-1
நின்றார் இருந்தார் இவன் என் நினைந்தான் கொல் என்று 0184-2
சென்றார் வெகுண்டார் சிரித்தார் திரு நாவல் ஊரான் 0184-3
நன்றால் மறையோன் மொழி என்று எதிர் நோக்கி நக்கான் 0184-4

39. நக்கான் முகம் நோக்கி நடுங்கி நுடங்கி யார்க்கும் 0185-1
மிக்கான் மிசை உத்தரியத் துகில் தாங்கி மேல் சென்று 0185-2
அக் காலம் உன் தந்தை தன் ஆள் ஓலை ஈதால் 0185-3
இக் காரியத்தை நீ இன்று சிரித்தது என் ஏடா என்ன 0185-4

40. மாசு இல் ஆ மரபில் வந்த வள்ளல் வேதியனை நோக்கி 0186-1
நேச முன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சி யால் சிரிப்பு நீங்கி 0186-2
ஆசு இல் அந்தணர்கள் வேறு ஓர் அந்தணர்க்கு அடிமை ஆதல் 0186-3

பேச இன்று உன்னைக் கேட்டோம் பித்தன் ஓ மறையோன் என்றார் 0186-4

41. பித்தன் உம் ஆகப் பின்னும் பேயன் உம் ஆக நீ இன்று 0187-1
எத்தனை தீங்கு சொன்னால் யாது மற்று அவற்றால் நாணேன் 0187-2
அத்தனைக்கு என்னை ஒன்றும் அறிந்திலை ஆகில் நின்று 0187-3
வித்தகம் பேச வேண்டாம் பணி செய வேண்டும் என்றார் 0187-4

42. கண்டது ஓர் வடிவால் உள்ளம் காதல் செய்து உருகா நிற்கும் 0188-1
கொண்டது ஓர் பித்த வார்த்தை கோபமும் உடனே ஆக்கும் 0188-2
உண்டு ஓராள் ஓலை என்னும் அதன் உண்மை அறிவேன் என்று 0188-3
தொண்டன் ஆர் ஓலை காட்டுக என்றனர் துணைவன் ஆரை 0188-4

43. ஓலை காட்டு என்று நம்பி உரைக்க நீ ஓலை காணல் 0189-1
பாலை ஓ அவை முன் காட்டப் பணி செயல் பாலை என்ற 0189-2
வேலை இல் நாவல் ஊரர் வெகுண்டு மேல் விரைந்து சென்று 0189-3
மால் அயன் தொடரா தானை வலிந்து பின்தொடரல் உற்றார் 0189-4

44. ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அம் தண் ஆளன் 0190-1
காவணத்து இடையே ஓடக் கடிது பின்தொடர்ந்து நம்பி 0190-2
பூவனத்து அவரை உற்றார் அவர் அலால் புரங்கள் செற்ற 0190-3
ஏவணச் சிலையினாரை யார் தொடர்ந்து எட்ட வல்லார் 0190-4

45. மறைகள் ஆயின முன் போற்றி மலர்ப் பதம் பற்றி நின்ற 0191-1
இறைவனைத் தொடர்ந்து பற்றி எழுதும் ஆள் ஓலை வாங்கி 0191-2
அறை கழல் அண்ணல் ஆளாய் அந்தணர் செய்தல் என்ன 0191-3
முறை எனக் கீறி இட்டார் முறை இட்டான் முடிவு இலாதான் 0191-4

46. அரு மறை முறை யிட்டு இன்னும் அறிவதற்கு அரியான் பற்றி 0192-1
ஒரு முறை முறை ஓ என்ன உழை நின்றார் விலக்கி இந்தப் 0192-2
பெரு முறை உலகில் இல்லாத நெறி கொண்டு பிணங்கு கின்ற 0192-3
திரு மறை முனிவர் ஏ எங்கு உளர் செப்பும் என்றார் 0192-4

47. என்றல் உம் நின்ற ஐயர் இங்கு உளேன் இருப்பும் சேயது 0193-1
அன்று இந்த வெண்ணெய் நல்லூர் அது நிற்க அறத்து ஆறு இன்றி 0193-2
வன் திறல் செய்து என் கையில் ஆவணம் வலிய வாங்கி 0193-3
நின்று இவன் கிழித்துத் தானே நிரப்பினான் அடிமை என்றான் 0193-4

48. குழை மறை காதினான் ஐ கோது இல் ஆரூரர் நோக்கிப் 0194-1
பழைய மன்று ஆடி போலும் இவன் என்று பண்பின் மிக்க 0194-2
விழைவு உறு மனமும் பொங்க வெண்ணெய் நல் ஊராய் ஏல் உன் 0194-3
பிழை நெறி வாழ்க்கை ஆங்கே பேச நீ போதாய் என்றார் 0194-4

49. வேதியன் அதனைக் கேட்டு வெண்ணெய் நல் ஊரிலே நீ 0195-1
போதினும் நன்று மற்றப் புனித நான் மறையோர் முன்னர் 0195-2
ஆதி இல் மூல ஓலை காட்டி நீ அடிமை ஆதல் 0195-3
சாதிப்பன் என்று முன்னே தண்டு முன் தாங்கிச் சென்றான் 0195-4

50. செல்லு நான் மறையோன் தன் பின் திரிமுகக் காந்தம் சேர்ந்த 0196-1
வல் இரும்பு அணையும் மா போல் வள்ளலும் கடிது சென்றான் 0196-2
எல்லை இல் சுற்றத்தாரும் இது என்னாம் என்று செல்ல 0196-3
நல்ல அந்தணர்கள் வாழும் வெண்ணெய் நல் ஊரை நண்ணி 0196-4

51. வேத பாரகரின் மிக்கார் விளங்கு பேர் அவை முன் சென்று 0197-1
நாதன் ஆம் மறையோன் சொல்லும் நாவலூர் ஆரூரன் தன் 0197-2
காதல் என் அடியான் என்னக் காட்டிய ஓலை கீறி 0197-3
மூது அறிவீர் முன் போந்தான் இது மற்று என் முறைபாடு என்றான் 0197-4

52. அந்தணர் அவையில் மிக்கார் மறையவர் அடிமை ஆதல் 0198-1

இந்த மா நிலத்தில் இல்லை என் சொன்னாய் ஐயா என்றார் 0198-2
வந்தவாறு இசைவே அன்றோ வக்கில் இவன் கிழித்த ஓலை 0198-3
தந்தை தன் தந்தை நேர்ந்தது என்றனன் தனியாய் நின்றான் 0198-4

53. இசைவின் ஆல் எழுதும் ஓலை காட்டினான் ஆகில் இன்று 0199-1
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றி ஆமோ 0199-2
தசை எல்லாம் ஒடுங்க மூத்தான் வழக்கினை சாரச் சொன்னான் 0199-3
அசைவு இல் ஆரூரர் எண்ணம் என் என்றார் அவையில் மிக்கார் 0199-4

54. அனைத்து நூல் உணர்ந்தீர் ஆதி சைவன் என்று அறிவீர் என்னைத் 0200-1
தனக்கு வேறு அடிமை என்று இவ் அந்தணன் சாதித்தான் ஏல் 0200-2
மனத்தினால் உணர்தற்கு எட்டா மாயை என் சொல்லுகேன் யான் 0200-3
எனக்கு இது தெளிய ஒண்ணாது என்றனன் எண்ணம் மிக்கான் 0200-4

55. அவ் உரை அவையின் முன்பு நம்பி ஆரூரர் சொல்லச் 0201-1
செவ்விய மறையோர் நின்ற திரு மறை முனியை நோக்கி 0201-2
இவ் உலகின் கண் நீ இன்று இவரை உன் அடிமை என்ற 0201-3
வெவ் உரை எம் முன்பு ஏற்ற வேண்டும் என்று உரைத்து மீண்டும் 0201-4

56. ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்று அயலார் தங்கள் 0202-1
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன முன்னே 0202-2
மூட்சியில் கிழித்த ஓலை படி ஓலை மூல ஓலை 0202-3
மாட்சியில் காட்ட வைத்தேன் என்றனன் மாயை வல்லான் 0202-4

57. வல்லை ஏல் காட்டு இங்கு என்ன மறையவன் வலி செய்யாமல் 0203-1
சொல்ல நீர் வல்லீர் ஆகில் காட்டுவேன் என்று சொல்லச் 0203-2
செல்வ நான்கு மறையோய் நாங்கள் தீங்கு உற ஒட்டோம் என்றார் 0203-3
அல்லல் தீர்த்து ஆள நின்றார் ஆவணம் கொண்டு சென்றார் 0203-4

58. இருள் மறை மிடறு ஒன் கையில் ஓலை கண்டு அவையோர் ஏவ 0204-1
அருள் பெறு காரணத்தான் உம் ஆவணம் தொழுது வாங்கிச் 0204-2
சுருள் பெறு மடியை நீக்கி விரித்தனன் தொன்மை நோக்கித் 0204-3
தெருள் பெறு சவையோர் கேட்ப வாசகம் செப்பு கின்றான் 0204-4

59. அரு மறை நாவல் ஆதி சைவன் ஆரூரன்செய்கை 0205-1
பெரு முனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால் 0205-2
வரு முறை மரபு உள்ளோரும் வழித் தொண்டு செய்தற்கு ஓலை 0205-3
இருமை ஆல் எழுதி நேர்ந்தேன் இதற்கு இவை என் எழுத்து 0205-4

60. வாசகம் கேட்ட பின்னர் மற்று மேல் எழுத்து இட்டார்கள் 0206-1
ஆசு இலா எழுத்தை நோக்கி அவை ஒக்கும் என்ற பின்னர் 0206-2
மசு இலா மறையோர் ஐயா மற்று உங்கள் பேரனார் தம் 0206-3
தேசு உடை எழுத்தே ஆகில் தெளியப் பார்த்து அறிமின் என்றார் 0206-4

61. அந்தணர் கூற இன்னும் ஆள் ஓலை இவன் ஏ காண்பான் 0207-1
தந்தை தன் தந்தை தான் வேறு எழுது கைச் சாத்து உண்டாகில் 0207-2
இந்த ஆவணத்தினோடு உம் எழுத்து நீர் ஒப்பு நோக்கி 0207-3
வந்தது மொழி மின் என்றான் வலிய ஆட்கொள்ளும் வள்ளல் 0207-4

62. திரண்ட மா மறையோர் தாமும் திரு நாவலூரர் கோ முன் 0208-1
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால் ஓலை 0208-2
அரண் தரு காப்பில் வேறு ஒன்று அழைத்து உடன் ஒப்பு நோக்கி 0208-3
இரண்டும் இருந்தது என்னே இனிச் செயல் இல்லை என்றார் 0208-4

63. நான் மறை முனிவ னார்க்கு நம்பி ஆரூரர் தோற்றீர் 0209-1
பான்மையின் ஏவல் செய்தல் கடன் என்று பண்பில் மிக்க 0209-2
மேன்மை யோர் விளம்ப நம்பி விதி முறை இதுவே ஆகில் 0209-3
யான் இதற்கு இசையேன் என்ன இசையுமோ என்று நின்றார் 0209-4

64. திரு மிகு மறையோர் நின்ற செழு மறை முனியை நோக்கி 0210-1
அரு முனி நீ முன் காட்டும் ஆவணம் அதனில் எங்கள் 0210-2
பெருமை சேர் பதி ஏ ஆகப் பேசிய நுமக்கு இவ் ஊரில் 0210-3
வரு முறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக என்றார் 0210-4

65. பெரு வரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவர் என்னை 0211-1
ஒருவரும் அறியீர் ஆகில் போதும் என்று உரைத்துச் சூழ்ந்த 0211-2
பெரு மறையவர் குழாமும் நம்பியும் பின்பு செல்லத் 0211-3
திரு அருள் துறையே புக்கார் கண்டிலர் திகைத்து நின்றார் 0211-4

66. எம்பிரான் கோயில் நண்ண இலங்கு நூல் மார்பர் எங்கள் 0212-1
நம்பர் தம் கோயில் புக்கது என் கொலோ என்று நம்பி 0212-2
தம் பெரு விருப்பின் ஒடு தனித் தொடர்ந்து அழைப்ப மாதோடு 0212-3
உம்பரின் விடை மேல் தோன்றி அவர் தமக்கு உணர்த்தல் உற்றார் 0212-4

67. முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப் 0213-1
பின்பு நாம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது 0213-2
துன்பு உறு வாழ்க்கை நின்னைத் தொடர் அறத் தொடர்ந்து வந்து 0213-3
நன் புல மறையோர் முன்னர் நாம் தடுத்து ஆண்டோம் என்றார் 0213-4

68. என்று எழும் ஓசை கேளா ஈன்ற ஆன் கனைப்புக் கேட்ட 0214-1
கன்று போல் கதறி நம்பி கர சரண் ஆதி அங்கம் 0214-2
துன்றிய புளகம் ஆகத் தொழுத கை தலை மேல் ஆக 0214-3
மன்று உளீர் செயலோ வந்து வலிய ஆட் கொண்டது என்றார் 0214-4

69. எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பு இடை நிறைய எங்கும் 0215-1
விண்ணவர் பொழி பூ மாரி மேதினி நிறைந்து விம்ம 0215-2
மண்ணவர் மகிழ்ச்சி பொங்க மறைகளும் முழங்கி ஆர்ப்ப 0215-3
அண்ணலை ஓலை காட்டி ஆண்டவர் அருளிச் செய்வார் 0215-4

70. மற்று நீ வன்மை பேசி வன் தொண்டன் என்னும் நாமம் 0216-1
பெற்றனை நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க 0216-2
அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண் மேல் நம்மைச் 0216-3
சொல் தமிழ் பாடுக என்றார் தூ மறை பாடும் வாயார் 0216-4

71. தேடிய அயனும் மாலும் தெளிவு உறா ஐந்து எழுத்தும் 0217-1
பாடிய பொருளாய் உள்ளான் பாடுவாய் நம்மை என்ன 0217-2
நாடிய மனத்தர் ஆகி நம்பி ஆரூரர் மன்றுள் 0217-3
ஆடிய செய்ய தாளை அஞ்சலி கூப்பி நின்று 0217-4

72. வேதியன் ஆகி என்னை வழக்கினால் வெல்ல வந்த 0218-1
ஊதியம் அறியாதேனுக்கு உணர்வு தந்து உய்யக் கொண்ட 0218-2
கோது இலா அமுதே இன்று உன் குணப் பெருங் கடலை நாயேன் 0218-3
யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன் என மொழிந்தார் 0218-4

73. அன்பனை அருளின் நோக்கி அம் கணர் அருளிச் செய்வார் 0219-1
முன்பு எனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலால் ஏ 0219-2
என் பெயர் பித்தன் என்றே பாடுவாய் என்றார் நின்ற 0219-3
வன் பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடல் உற்றார் 0219-4

74. கொத்து ஆர் மலர்க் குழலாள் ஒரு கூறாய் அடியவர் பால் 0220-1
மெய்த் தாயினும் இனியானை அவ் வியன் நாவலர் பெருமான் 0220-2
பித்தா பிறை சூடி எனப் பெரிதாம் திருப் பதிகம் 0220-3
இத் தாரணி முதலாம் உலகு எல்லாம் உய்ய எடுத்தார் 0220-4

75. முறையால் வரு மதுரத் துடன் மொழி இந் தள முதலில் 0221-1
குறையா நிலை மும்மைப் பாடிக் கூடும் கிழமை யினால் 0221-2

நிறை பாணியின் இசை கோள் புணர் நீடும் புகழ் வகையால் 0221-3
இறையான் மகிழ் இசை பாடினன் எல்லாம் நிகர் இல்லான் 0221-4

76. சொல்லார் தமிழ் இசை பாடிய தொண்டன் தனை இன்னும் 0222-1
பல் ஆறு உலகினில் நம் புகழ் பாடு என்று உரு பரிவில் 0222-2
நல்லார் வெண்ணெய் நல்லூர் அருள் துறை மேவிய நம்பன் 0222-3
எல்லா உலகும் உய்யப் புரம் எய்தான் அருள் செய்தான் 0222-4

77. அயல் ஓர் தவம் முயல்வார் பிறர் அன்றே மணம் அழியும் 0223-1
செயலால் நிகழ் புத்தூர் வரு சிவ வேதியன் மகளும் 0223-2
உயர் நாவலர் தனி நாதனை ஒழியாது உணர் வழியில் 0223-3
பெயராது உயர் சிவலோகமும் எளிதாம் வகை பெற்றாள் 0223-4

78. நாவலர் கோன் ஆரூரன் தனை வெண்ணெய் நல் ஊரில் 0224-1
மேவும் அருள் துறை அமர்ந்த வேதிர் ஆட்கொண்டு அதற்பின் 0224-2
பூ அலரும் தடம் பொய்கைத் திரு நாவலூர் புகுந்து 0224-3
தேவர் பிரான் தனைப் பணிந்து திருப் பதிகம் பாடினார் 0224-4

79. சிவன் உறையும் திருத் துறையூர் சென்று அணைந்து தீவினை ஆல் 0225-1
அவ நெறியில் செல்லாமே தடுத்து ஆண்டாய் அடியேற்குத் 0225-2
தவ நெறி தந்து அருள் என்று தம்பிரான் முன் நின்று 0225-3
பவ நெறிக்கு விலக்கு ஆகும் திருப் பதிகம் பாடினார் 0225-4

80. புலன் ஒன்றும் படி தவத்தில் புரிந்த நெறி கொடுத்து அருள 0226-1
அலர் கொண்ட நறும் சோலைத் திருத் துறையூர் அமர்ந்து அருளும் 0226-2
நிலவும் தண் புனலும் ஒளிர் நீள் சடையோன் திருப்பாதம் 0226-3
மலர் கொண்டு போற்றி இசைத்து வந்தித்தார் வன தொண்டர் 0226-4

81. திருத் துறையூர் தனைப் பணிந்து சிவபெருமான் அமர்ந்து அருளும் 0227-1
பொருத்தம் ஆம் இடம் பலவும் புக்கு இறைஞ்சி பொற்புலியூர் 0227-2
நிருத்தனார் திருக் கூத்துத் தொழுவதற்கு நினைவு உற்று 0227-3
வருத்தம் மிகு காதலினால் வழிக் கொள்வான் மனம் கொண்டார் 0227-4

82. மலை வளர் சந்து அகில் பீலி மலர் பரப்பி மணி கொழிக்கும் 0228-1
அலை தரு தண் புனல் பெண்ணை யாறு கடந்து ஏறிய பின் 0228-2
நிலவு பசும் புரவி நெடும் தேர் இரவி மேல் கடலில் 0228-3
செல அணையும் பொழுது அணையத் திருவதிகை புறத்து அணைந்தார் 0228-4

83. உடைய அரசு உலகு ஏத்தும் உழவாரப் படை ஆளி 0229-1
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்பு பெரும் பதியை மிதித்து 0229-2
அடையும் அதற்கு அஞ்சுவான் என்று அந் நகரில் புகுதாதே 0229-3
மடை வளர் தண் புறம் பணையில் சித்தவட மடம் புகுந்தார் 0229-4

84. வரி வளர் பூஞ் சோலை சூழ் மடத்தின் கண் வன் தொண்டர் 0230-1
விரிதிரை நீர்க் கெடில வட வீரட்டத்து இறை தாள் 0230-2
பரிவு உடைய மனத்தினர் ஆய்ப் புடை எங்கும் மிடைகின்ற 0230-3
பரிசனமும் துயில் கொள்ளப் பள்ளி அமர்ந்து அருளினார் 0230-4

85. அது கண்டு வீரட்டத்து அமர்ந்து அருளும் அம் கணரும் 0231-1
முது வடிவின் மறையவராய் முன் ஒருவர் அறியாமே 0231-2
பொது மடத்தின் உள்புகுந்து பூந் தாரான் திரு முடி மேல் 0231-3
பதும மலர்த் தாள் வைத்துப் பள்ளி கொள்வார் போல் பயின்றார் 0231-4

86. அந்நிலை ஆரூரன் உணர்ந்து அரு மறையோய் உன் அடி என் 0232-1
சென்னியில் வைத்தனை என்னத் திசை அறியா வகை செய்தது 0232-2
என்னுடைய மூப்புக் காண் என்று அருள அதற்கு இசைந்து 0232-3
தன் முடி அப்பால் வைத்தே துயில் அமர்ந்தான் தமிழ் நாதன் 0232-4

87. அங்கும் அவன் திரு முடிமேல் மீட்டும் அவர் தாள் நீட்டச் 0233-1
செம் கயல் பாய் தடம் புடை சூழ் திரு நாவலூர் ஆளி 0233-2
இங்கு என்னைப் பலகாலும் மிதித்தனை நீ யார் என்னக் 0233-3
கங்கை சடைக் கரந்த பிரான் அறிந்திலையோ எனக் கரந்தான் 0233-4

88. செம்மாந்து இங்கு யான் அறியாது என் செய்தேன் எனத் தெளிந்து 0234-1
தம்மானை அறியாத சதியார் உளரே என்று 0234-2
அம்மானைத் திருவதிகை வீரட்டா னத்து அமர்ந்த 0234-3
கைம் மாவின் உரியானைக் கழல் பணிந்து பாடினார் 0234-4

89. பொன் திரளும் மணித் திரளும் பொரு கரி வெண் கோடுகளும் 0235-1
மின் திரண்ட வெண் முத்தும் விரை மலரும் நறுங் குறடும் 0235-2
வன் திரைகளால் கொணர்ந்து திருவதிகை வழிபடலால் 0235-3
தென் திசையில் கங்கை எனும் திருக் கெடிலம் திளைந்து ஆடி 0235-4

90. அம் கணரை அடி போறி அங்கு அகன்று மற்று அந்தப் 0236-1
பொங்கு நதித் தென் கரை போய்ப் போர் வலித் தோள் மாவலி தன் 0236-2
மங்கல வேள்வியில் பண்டு வாமனனாய் மண் இரந்த 0236-3
செங்கணவன் வழி பட்ட திரு மாணிக் குழி அணைந்தார் 0236-4

91. பரம் பொருளைப் பணிந்து தாள் பரவிப் போய்ப் பணிந்தவர்க்கு 0237-1
வரம் தருவான் தினை நகரை வணங்கினர் வண் தமிழ் பாடி 0237-2
நரம்பு உடை யாழ் ஒலி முழவின் நாத ஒலி வேத ஒலி 0237-3
அரம்பையர் தம் கீத ஒலி அறாத் தில்லை மருங்கு அணைந்தார் 0237-4

92. தேம் அலங்கல் அணி மா மணி மார்பின் செம்மல் அம் கயல்கள் செம் கலத் தண்
0238-1
பூ மலங்க எதிர் பாய்வன மாடே புள் அலம்பு திரை வெள் வளை வாவி 0238-2
தா மலங்குகள் தடம் பணை சூழும் தண் மருங்கு தொழுவார்கள் தம்மும்மை 0238-3
மா மங்கள் அற வீடு அருள் தில்லை மல்லல் அம்பதியின் எல்லை வணங்கி 0238-4

93. நாக சூத வகுளம் சரளம் சூழ் நாளிகேரம் இவங்கம் நரந்தம் 0239-1
பூக ஞாழல் குளிர் வாழை மதூகம் பொதுளும் வஞ்சி பல எங்கும் நெருங்கி 0239-2
மேக சாலமலி சோலைகள் ஆகி மீது கோகிலம் மிடைந்து மிழற்றப் 0239-3
போக பூமியினும் மிக்கு விளங்கும் பூம் பறம்பணை கடந்து புகுந்தார் 0239-4

94. வன்னி கொன்றை வழை சண்பகம் ஆரம் மலர் பலாசொடு செருந்தி மந்தாரம்
0240-1
கன்னி காரம் குரவம் கமழ் புன்னை கற்பு பாடலம் கூவிளம் ஓங்கித் 0240-2
துன்னு சாதி மரு மாலதி மௌவல் துதைந்த நந்திகரம் வீரம் மிடைந்த 0240-3
பன் மலர்ப் புனித நந்தவனங்கள் பணிந்து சென்றனன் மணம் கமழ் தாரான் 0240-4

95. இடம் மருங்கு தனி நாயகி காண ஏழ் பெரும் புவனம் உய்ய எடுத்து 0241-1
நடம் நவின்று அருள் சிலம்பொலி போற்றும் நா மறைப் பதியை நாளும் வணங்க
0241-2
கடல் வலம் கொள்வது போல் புடை சூழும் காட்சி மேவி மிகு 0241-3
சேண் செல ஓங்கும் தடம் மருங்கு வளர் மஞ்சிவர் இஞ்சி தண் கிடங்கை எதிர் கண்டு
மகிழ்ந்தார்
0241-4

96. மன்றுள் ஆடும் மதுவின் நசையாலே மறைச் சுருபு அறை புரத்தின் மருங்கே
0242-1
குன்று போலும் மணி மா மதில் சூழும் குண்ட கழக் கமல வண்டு அலர் கைதைத்
0242-2
துன்று நீறுபுனை மேனிய வாகித் தூய நீறு புனை தொண்டர்கள் என்னச் 0242-3
சென்று சென்று முரல்கின்றன கண்டு சிந்தை அன்பொடு திளைத்து எதிர் சென்றார்
0242-4

97. பார் விளங்க வளர் நான் மறை நாதம் பயின்ற பண்புமிக வெண்கொடி ஆடும் 0243-1
சீர் விளங்கு மணி நா ஒலியாலும் திசைகள் நான்கு எதிர் புறப்படல் ஆலும் 0243-2
தார் விளங்கு வரை மார்பின் அயன் பொன் சதுர் முகங்கள் என ஆயின தில்லை 0243-3
ஊர் விளங்கு திரு வாயில்கள் நான்கின் உத்தரத் திசை வாயில் முன் எய்தி 0243-4

98. அன்பின் வந்து எதிர் கொண்ட சீர் அடியார்களோ நம்பி ஆரூரர் தாமோ 0244-1
முன் பிறைஞ்சினர் யாவர் என்று அறியா முறைமையால் எதிர் வணங்கி 0244-2
பின்பு கும்பிடும் விருப்பில் நிறைந்து பெருகு நாவல் நகரார் பெருமானும் 0244-3
பொன் பிறங்கு மணி மாளிகை நீடும் பொருவில் இறந்த திரு வீதி புகுந்தார் 0244-4

99. அம் கண் மா மறை முழங்கும் மருங்கே ஆடல் அரம்பையர் அரங்கு முழங்கும் 0245-1
மங்குல் வானின் மிசை ஐந்தும் முழங்கும் வாச மாலைகளில் வண்டு முழங்கும் 0245-2
பொங்கும் அன்பு அருவி கண் பொழி தொண்டர் போற்றி இசைக்கும் ஒலி எங்கும் முழங்கும் 0245-3
திங்கள் தங்கு சடை கங்கை முழங்கும் தேவ தேவர் புரியும் திருவீதி 0245-4

100. போக நீடு நிதி மன்னவன் மன்னும் புரங்கள் ஒப்பன வரம்பு இல ஓங்கி 0246-1
மாகம் முன் பருகுகின்றன போலும் மாளிகைக் குலம் மிடைந்த பதாகை 0246-2
யோக சிந்தை மறையோர்கள் வளர்க்கும் ஓமம் தூமம் உயர்வானில் அடுப்ப 0246-3
மேக பந்திகளின் மீது இடை எங்கும் மின் நுடங்குவன என்ன விளங்கும் 0246-4

101. ஆடு தோகை புடை நாசிகள் தோறும் அரணி தந்த சுடர் ஆகுதி தோறும் 0247-1
மாடுதாமம் மணி வாயில்கள் தோறும் மங்கலக் கலசம் வேதிகை தோறும் 0247-2
சேடு கொண்ட ஒளி தேர் நிரை தோறும் செந்நெல் அன்ன மலை சாலைகள் தோறும் 0247-3
நீடு தண் புனல்கள் பந்தர்கள் தோறும் நிறைந்த தேவர் கணம் நீள் இடை தோறும் 0247-4

102. எண்ணில் பேர் உலகு அனைத்தினும் உள்ள எல்லையில் அழகு சொல்லிய எல்லாம் 0248-1
மண்ணில் இப் பதியில் வந்தன என்ன மங்கலம் பொலி வளத்தன ஆகிப் 0248-2
புண்ணியப் புனித அன்பர்கள் முன்பு புகழ்ந்து பாடல் புரி பொற்பின் விளங்கும் 0248-3
அண்ணல் ஆடு திரு அம்பலம் சூழ்ந்த அம்பொன் வீதியினை நம்பி வணங்கி 0248-4

103. மால் அயன் சதமகன் பெரும் தேவர் மற்றும் உள்ளவர்கள் முற்றும் நெருங்கி 0249-1
சீல மாமுனிவர் சென்று முன் துன்னித் திருப் பிரம்பின் அடி கொண்டு திளைத்துக் 0249-2
காலம் நேர் படுதல் பார்த்து அயல் நிற்பக் காதல் அன்பர் கண நாதர் புகும்பொன் 0249-3
கோலம் நீடு திருவாயில் இறைஞ்சிக் குவித்த செங்கை தலை மேல் கொடு புக்கார் 0249-4

104. பெரு மதில் சிறந்த செம் பொன் மாளிகை மின் பிறங்கும் பேரம்பலம் மேரு 0250-1
வருமுறை வலம் கொண்டு இறைஞ்சிய பின்னர் வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார் 0250-2
அருமறை முதலில் நடுவினில் கடையில் அன்பர் தம் சிந்தையில் அலர்ந்த 0250-3
திரு வளர் ஒளி சூழ் திருச்சிற்றம்பலம் முன் திரு அணுக்கன் திரு வாயில் 0250-4

105. வையகம் பொலிய மறைச் சிலம்பு ஆர்ப்ப மன்று உளே மால் அயன் தேட 0251-1
ஐயர் தாம் வெளியே ஆடுகின்றார் ஐ அஞ்சலி மலர்த்தி முன் குவித்த 0251-2

கைகளோ திளைத்த கண்களோ அந்தக் கரணமோ கலந்த அன்பு உந்தச் 0251-3
செய் தவப் பெரியோன் சென்று தாழ்ந்து எழுந்தான் திருக் களிற்றுப்படி மருங்கு 0251-4

106. ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள அளப்பு அரும் காரணங்கள் நான்கும் 0252-1
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்து விகமே ஆக 0252-2
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப் பெரும் கூத்தின் 0252-3
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து மாறு இலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் 0252-4

107. தெண் இலா மலர்ந்த வேணியாய் உன் தன் திரு நடம் கும்பிடப் பெற்று 0253-1
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம் என்று 0253-2
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக் கைம் மலர் உச்சி மேல் குவித்துப் 0253-3
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார் 0253-4

108. தடுத்து முன் ஆண்ட தொண்டனார் முன்பு தனிப் பெரும் தாண்டவம் புரிய 0254-1
எடுத்த சேவடியார் அருளினால் தரளம் எறி புனல் மறி திரைப் பொன்னி 0254-2
மடுத்த நீள் வண்ணப் பண்ணை ஆரூரில் வருக நம்பால் என வானில் 0254-3
அடுத்த போதினில் வந்து எழுந்தது ஓர் நாதம் கேட்டலும் அது உணர்ந்து எழுந்தார் 0254-4

109. ஆடு கின்றவர் பேர் அருளினால் நிகழ்ந்த அப் பணி சென்னி மேல் கொண்டு 0255-1
சூடு தம் கரங்கள் அஞ்சலி கொண்டு தொழும் தொறும் புறவிடை கொண்டு 0255-2
மாடு பேர் ஒளியின் வளரும் அம்பலத்தை வலம் கொண்டு வணங்கினர் போந்து 0255-3
நீடுவான் பணிய உயர்ந்த பொன் வரை போல் நிலை எழு கோபுரம் கடந்து 0255-4

110. நின்று கோபுரத்தை நிலம் உறப் பணிந்து நெடும் திரு வீதியை வணங்கி 0256-1
மன்றல் ஆர் செல்வ மறுகின் ஊடு ஏகி மன்னிய திருப்பதி அதனில் 0256-2
தென் திசை வாயில் கடந்து முன் போந்து சேண் படும் திரு எல்லை இறைஞ்சிக் 0256-3
கொன்றை வார் சடையான் அருளையே நினைவார் கொள்ளிடத் திருநதி கடந்தார் 0256-4

111. புறம் தருவார் போற்றி இசைப்ப புரி முந்நூல் அணி மார்பர் 0257-1
அறம் பயந்தாள் திருமுலைப் பால் அமுது உண்டு வளர்ந்தவர் தாம் 0257-2
பிறந்து அருளும் பெரும் பேறு பெற்றது என முற்று உலகில் 0257-3
சிறந்த புகழ்க் கழுமலமாம் திருப்பதியைச் சென்று அணைந்தார் 0257-4

112. பிள்ளையார் திரு அவதாரம் செய்த பெரும் புகலி 0258-1
உள்ளு நான் மிதியேன் என்று ஊர் எல்லைப் புறம் வணங்கி 0258-2
வள்ளலார் வலமாக வரும் பொழுதின் மங்கை இடம் 0258-3
கொள்ளும் ஆல் விடையானும் எதிர் காட்சி கொடுத்து அருள 0258-4

113. மண்டிய பேர் அன்பினால் வன் தொண்டர் நின்று இறைஞ்சித் 0259-1
தெண் திரை வேலையில் மிதந்த திருத் தேணி புரத் தாரைக் 0259-2
கண்டு கொண்டேன் கயிலையினில் வீற்று இருந்த படி என்று 0259-3
பண்டு அரும் இன்னிசை பயின்ற திருப் பதிகம் பாடினார் 0259-4

114. இருக்கோளம் இடும் பெருமான் எதிர் நின்றும் எழுந்து அருள 0260-1
வெருக் கோள் உற்றது நீங்க ஆரூர் மேல் செல விரும்பிப் 0260-2
பெருக்கு ஓதம் சூழ் புறவப் பெரும் பதியை வணங்கிப் போய்த் 0260-3
திருக் கோலக்கா வணங்கி செந்தமிழ் மாலைகள் பாடி 0260-4

115. தேன் ஆர்க்கும் மலர்ச் சோலைத் திருப் புன்கூர் நம்பர் பால் 0261-1

ஆனாப் பேர் அன்பு மிக அடி பணிந்து தமிழ் பாடி 0261-2
மான் ஆர்க்கும் கர தலத்தார் மகிழ்த இடம் பல வணங்கிக் 0261-3
கான் ஆர்க்கும் மலர்த் தடம் சூழ் காவிரியின் கரை அணைந்தார் 0261-4

116. வம்பு உலா மலர் மணி கொழித்து வந்து இழியும் 0262-1
பைம் பொன் வார் கரைப் பொன்னிப் பயில் தீர்த்தம் படிந்து ஆடி 0262-2
தம்பிரான் மயிலாடுதுறை வணங்கித் தாவில் சீர் 0262-3
அம்பர் மாகாளத்தின் அமர்ந்த பிரான் அடி பணிந்தார் 0262-4

117. மின் ஆர் செம் சடை அண்ணல் விரும்பு திருப் புகலூரை 0263-1
முன் ஆகப் பணிந்து ஏத்தி முதல்வன் தன் அருள் நினைந்து 0263-2
பொன் ஆரும் உத்தரியம் புரி முந்நூல் அணி மார்பர் 0263-3
தென் நாவலூர் ஆளி திருவாரூர் சென்று அணைந்தார் 0263-4

118. தேர் ஆரும் நெடு வீதித் திருவாரூர் வாழ்வார்க்கு 0264-1
ஆராத காதலின் நம் ஆரூரன் நாம் அழைக்க 0264-2
வாரா நின்றான் அவனை மகிழ்ந்து எதிர் கொள்வீர் என்று 0264-3
நீர் ஆரும் சடை முடி மேல் நிலவு அணிந்தார் அருள் செய்தார் 0264-4

119. தம்பிரான் அருள் செய்த திருத் தொண்டர் அது சாற்றி 0265-1
எம் பிரான் ஆனார் அருள் தான் இருந்த பரிசு இதுவானால் 0265-2
நம் பிரானார் ஆவார் அவர் அன்றே எனும் நலத்தால் 0265-3
உம்பர் நாடு இழிந்தது என எதிர் கொள்ள உடன் எழுந்தார் 0265-4

120. மாளிகைகள் மண்டபங்கள் மருங்கு பெரும் கொடி நெருங்கத் 0266-1
தாளின் நெடும் தோரணமும் தழைக் கமுகும் குழைத் தொடையும் 0266-2
நீள் இலைய கதலிகளும் நிறைந்த பசும் பொன் தசும்பும் 0266-3
ஒளி நெடு மணி விளக்கும் உயர் வாயில் தொறும் நிரைத்தார் 0266-4

121. சோதி மணி வேதிகைகள் தூ நறும் சாந்து அணி நீவிக் 0267-1
கோது இல் பொரி பொன் சுண்ணம் குளிர் தரள மணி பரப்பி 0267-2
தாது இவர் பூம் தொடை மாலைத் தண் பந்தர்களும் சமைத்து 0267-3
வீதிகள் நுண் துகள் அடங்க விரைப் பனிநீர் தெளித்தார் 0267-4

122. மங்கல கீதம் பாட மழை நிகர் தூரியம் முழங்கச் 0268-1
செம் கயல் கண் முற்றிழையார் தெற்றி தொறும் நடம் பயில 0268-2
நங்கள் பிரான் திருவாரூர் நகர் வாழ் நம்பியை முன் 0268-3
பொங்கு எயில் நீள் திருவாயில் புறம் உற வந்து எதிர்கொண்டார் 0268-4

123. வந்து எதிர் கொண்டு வணங்குவார் முன் வன்தொண்டர் அஞ்சலி கூப்பி வந்து 0269-1
சிந்தை களிப்புற வீதி யூடு செல்வார் திருத் தொண்டர் தம்மை நோக்கி 0269-2
எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர் என்னும் 0269-3
சந்த இசைப் பதிகங்கள் பாடித் தம் பெருமான் திருவாயில் சார்ந்தார் 0269-4

124. வான் உற நீள் திரு வாயில் நோக்கி மண்ணுற ஐந்து உறுப்பால் வணங்கித் 0270-1
தேன் உறை கற்பக வாச மாலைத் தேவாசிரியன் தொழுது இறைஞ்சி 0270-2
ஊனும் உயிரும் உருக்கும் அன்பால் உச்சி குவித்த செம் கைகலோடும் 0270-3
தூ நறுங் கொன்றையான் மூலட்டானம் சூழ் திரு மாளிகை வாயில் புக்கார் 0270-4

125. புற்று இடம் கொண்ட புராதனனைப் பூங்கோயில் மேய பிரானையார்க்கும் 0271-1
பற்று இடம் ஆய பரம் பொருளைப் பார்ப்பதி பாகனை பங்கயத்தாள் 0271-2
அர்ச்சனை செய்ய அருள் புரிந்த அண்ணலை மண்மிசை வீழ்ந்து இறைஞ்சி 0271-3
நற்றமிழ் நாவலர் கோன் உடம்பால் நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார் 0271-4

126. அன்பு பெருக உருகி உள்ளம் அலைய அட்டாங்க பஞ்சாங்கம் ஆக 0272-1
முன்பு முறைமை யினால் வணங்கி முடிவு இலாக் காதல் முதிர ஓங்கி 0272-2
நன் புலன் ஆகிய ஐந்தும் ஒன்றி நாயகன் சேவடி எய்தப் பெற்ற 0272-3
இன்ப வெள்ளத்து இடை மூழ்கி நின்றே இன்னிசை வண்டமிழ் மாலை பாட 0272-4

127. வாழிய மா மறைப் புற்று இடம் கொள் மன்னவன் ஆரூரர் அருளால் ஓர் வாக்கு 0273-1
தோழமை ஆக உனக்கு நம்மைத் தந்தனம் நாம் முன்பு தொண்டு கொண்ட 0273-2
வேள்வியில் அன்று நீ கொண்ட கோலம் என்றும் புனைந்து நின் வேட்கை தீர 0273-3
வாழி மண் மேல் விளையாடுவாய் என்று ஆரூரர் கேட்க எழுந்தது அன்றே 0273-4

128. கேட்க விரும்பி வன் றொண்டர் என்றும் கேடு இலாதானை இறைஞ்சி நின்றே 0274-1
ஆட்கொள வந்த மறையவனே  ஆரூர் அமர்ந்த அருமணியே 0274-2
வாள் கயல் கொண்ட கண் மங்கை பங்கா மற்று உன் பெரிய கருணை அன்றே 0274-3
நாட் கமலப் பதம் தந்தது இன்று நாயினேனை பொருளாக என்றார் 0274-4

129. என்று பல முறையால் வணங்கி எய்திய உள்ளக் களிப்பி னோடும் 0275-1
வென்றி அடல் விடைபோல் நடந்து வீதி விடங்கப் பெருமான் முன்பு 0275-2
சென்று தொழுது துதித்து வாழ்ந்து திருமாளிகை வலம் செய்து போந்தார் 0275-3
அன்று முதல் அடியார்கள் எல்லாம் தம்பிரான் தோழர் என்றே அழைத்தார் 0275-4

130. மை வளர் கண்டர் அருளினாலே வண்டமிழ் நாவலர் தம் பெருமான் 0276-1
சைவ விடங்கின் அணிபுனைந்து சாந்தமும் மாலையும் தாரும் ஆகி 0276-2
மெய் வளர் கோலம் எல்லாம் பொலிய மிக்க விழுத்தவ வேந்தர் என்னத் 0276-3
தெய்வ மணிப் புற்றுளாரைப் பாடித்திளைத்து மகிழ்வொடும் செல்லா நின்றார் 0276-4

131. இதற்கு முன் எல்லை இல்லாத் திரு நகர் இதனுள் வந்து 0277-1
முதல் பெருங் கயிலை ஆதி முதல்வர் தம் பங்கினாள் குப் 0277-2
பொதுக் கடிந்து உரிமை செய்யும் பூம் குழல் சேடிமாரில் 0277-3
கதிர்த்த பூண் ஏந்து கொங்கை கமலினி அவதரித்தாள் 0277-4

132. கதிர் மணி பிறந்தது என்ன உருத்திர கணிகை மாராம் 0278-1
பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும் நாமம் 0278-2
விதி யுளி விளக்கத்து ஆல் ஏ மேதகு சான்றோர் ஆன்ற 0278-3
மதி அணி புனிதன் நன்னாள் மங்கல அணியால் சாற்றி 0278-4

133. பரவினர் காப்புப் போற்ப் பயில் பெரும் சுற்றம் திங்கள் 0279-1
விரவிய பருவம் தோறும் விழா அணி எடுப்ப மிக்கோர் 0279-2
வர மலர் மங்கை இங்கு வந்தனள் என்று சிந்தை 0279-3
தர வரு மகிழ்ச்சி பொங்கத் தளர் நடைப் பருவம் சேர்ந்தார் 0279-4

134. மான் இளம் பிணையோ தெய்வ வளர் இள முகையோ வாசத் 0280-1
தேன் இளம் பதமோ வேலைத் திரை இளம் பவள வல்லிக் 0280-2
கான் இளம் கொடியோ திங்கள் கதிர் இளம் கொழுந்தோ காமன் 0280-3
தான் இளம் பருவம் கற்கும் தனி இளம் தனுவோ என்ன 0280-4

135. நாடும் இன் பொற்பு வாய்ப்பு நாளும் நாள் வளர்ந்து பொங்க 0281-1
ஆடும் மென் கழங்கும் பந்தும் அம்மானை ஊசல் இன்ன 0281-2
பாடும் இன் இசையும் தங்கள் பனிமலை வல்லி பாதம் 0281-3
கூடும் அன்பு உருகப் பாடும் கொள்கை யோர் குறிப்புத் தோன்ற 0281-4

136. பிள்ளைமைப் பருவம் மீதாம் பேதைமைப் பருவம் நீங்கி 0282-1
அள்ளுதற்கு அமைந்த பொற் பால் அநங்கன் மெய்த் தனங்கள் ஈட்டம் 0282-2
கெள்ள மிக்கு உயர்வ போன்ற கொங்கை கோங் கரும்பை வீழ்ப்ப 0282-3
உள்ள மெய்த் தன்மை முன்னை உண்மையும் தோன்ற உய்ப்பார் 0282-4

137. பாங்கியர் மருங்கு சூழப் படர் ஒளி மறுகு சூழத் 0283-1
தேம் கமழ் குழலின் வாசம் திசை எலாம் சென்று சூழ 0283-2
ஓங்கு பூங் கோயில் உள்ளார் ஒருவரை அன்பி னோடும் 0283-3
பூம் கழல் வணங்க என்றும் போதுவார் ஒரு நாள் போந்தார் 0283-4

138. அணி சிலம்பு அடிகள் பார் வென்று அடிப் படுத்தனம் என்று ஆர்ப்ப 0284-1
மணி கிளர் காஞ்சி அல்குல் வரி அர உலகை வென்ற 0284-2
துணிவு கொண்டு ஆர்ப்ப மஞ்சு சுரி குழல் கழிய விண்ணும் 0284-3
பணியும் என்று இன வண்டு ஆர்ப்ப பரவையார் போதும் போதில் 0284-4

139. புற்று இடம் விரும்பினாரைப் போற்றினர் தொழுது செல்வார் 0285-1
சுற்றிய பரிசனங்கள் சூழ ஆளுடை நம்பி 0285-2
நற் பெரும் பான்மை கூட்ட நகைபொதிந்து இலங்கு செவ்வாய் 0285-3
விற் புரை நுதலின் வேல் கண் விளங்கு இழையவரைக் கண்டார் 0285-4

140. கற்பகத்தின் பூங் கொம்போ காமன் தன் பெரு வாழ்வோ 0286-1
பொற்பு உடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து 0286-2
வில் குவளை பவள மலர் மதி பூத்த விரைக் கொடியோ 0286-3
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்று அதிசயித்தார் 0286-4

141. ஓவிய நான்முகன் எழுத ஒண்ணாமை உள்ளத்தால் 0287-1
மேவிய தன் வருத்தம் உற விதித்த ஒரு மணி விளக்கோ 0287-2
மூவுலகின் பயனாகி முன் நின்றது என நினைந்து 0287-3
நாவலர் காவலர் நின்றார் நடு நின்றார் படை மதனார் 0287-4

142. தண் தரள மணித் தோடும் தகைத்தோடும் கடை பிறழும் 0288-1
கெண்டை நெடும் கண் வியப்பக் கிளர் ஒளிப் பூண் உரவோனை 0288-2
அண்டர் பிரான் திருவருளால் அயல் அறியா மனம் விரும்பப் 0288-3
பண்டை விதி கடை கூட்டப் பரவையாரும் கண்டார் 0288-4

143. கண் கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர் விரிப்ப 0289-1
விண் கொள்ளாப் பேர் ஒளியான் எதிர் நோக்கும் மெல்லியலுக்கு 0289-2
எண் கொள்ளா காதலின் முன்பு எய்தாத ஒரு வேட்கை 0289-3
மண் கொள்ளா நாண் மடம் அச்சம் பயிர்ப்பை வலிந்து எழலும் 0289-4

144. முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ பெருகு ஒளியால் 0290-1
தன்னேர் இலை மாரனோ தார் மார்பின் விஞ்சையனோ 0290-2
மின் நேர் செம் சடை அண்ணல் மெய் அருள் பெற்று உடையவனோ 0290-3
என்னே என் மனம் திரித்த இவன் யாரோ என நினைந்தார் 0290-4

145. அண்ணல் அவன் தன் மருங்கே அளவு இறந்த காதலினால் 0291-1
உள் நிறையும் குணம் நான்கும் ஒரு புடைச் சாய்ந்தன எனினும் 0291-2
வண்ண மலர்க் கரும் கூந்தல் மடக் கொடியை வலிதாக்கிக் 0291-3
கண் நுதலைத் தொழும் அன்பே கைக் கொண்டு செலவு உய்ப்ப 0291-4

146. பாங்கு ஒடிச் சிலை வளைத்துப் படை அநங்கன் விடு பாணம் 0292-1
தாம் கோலி எம் மருங்கும் தடை செய்ய மடவரலும் 0292-2
தேம் கோதை மலர்க் குழல் மேல் சிறை வண்டு கலந்து ஆர்ப்பப் 0292-3
பூம் கோயில் அமர்ந்த பிரான் பொன் கோயில் போய்ப் புகுந்தாள் 0292-4

147. வன் தொண்டர் அது கண்டு என் மனம் கொண்ட மயில் இயலின் 0293-1
இன் தொண்டைச் செம் கனி வாய் இளம் கொடி தான் யார் என்ன 0293-2
அன்று அங்கு முன் நின்றார் அவர் நங்கை பரவையார் 0293-3
சென்று உம்பர் தரத்தார்க்கும் சேர்வு அரியார் எனச் செப்ப 0293-4

148. பேர் பரவை பெண்மையினில் பெரும் பரவை விரும்பு அல்குல் 0294-1
ஆர் பரவை அணி திகழும் மணி முறுவல் அரும் பரவை 0294-2

சீர் பரவை ஆயினாள் திரு உருவின் மென் சாயல் 0294-3
ஏர் பரவை இடைப் பட்ட என் ஆசை எழு பரவை 0294-4

149. என்று இனைய பலவும் நினைந்து எம்பெருமான் அருள் வகையான் 0295-1
முன் தொடர்ந்து வரும் காதல் முறைமை யினால் தொடக்கு உண்டு 0295-2
நன்று எனை ஆட் கொண்டவர் பால் நண்ணுவன் என்று உள் மகிழ்ந்து 0295-3
சென்று உடைய நம்பியும் போய்த் தேவர் பிரான் கோயில் புக 0295-4

150. பரவையார் வலம் கொண்டு பணிந்து ஏத்தி முன்னரே 0296-1
புரவனார் கோயிலின் நின்று ஒரு மருங்கு புறப்பட்டார் 0296-2
விரவு பெருங் காதலினால் மெல் இயலார் தமை வேண்டி 0296-3
அரவின் ஆரம் புனைந்தார் அடி பணிந்தார் ஆரூரர் 0296-4

151. அவ்வாறு பணிந்து ஏத்தி அணி ஆரூர் மணிப் புற்றின் 0297-1
மை வாழும் திரு மிடற்று வானவர் பால் நின்றும் போந்து 0297-2
எவ்வாறு சென்றாள் என் இன் உயிராம் அன்னம் எனச் 0297-3
செவ் வாய் வெண் நகைக் கொடியைத் தேடுவார் ஆயினார் 0297-4

152. பாசமாம் வினைப் பற்று அறுப்பான் மிகும் 0298-1
ஆசை மேலும் ஓர் ஆசை அளிப்பது ஓர் 0298-2
தேசின் மன்னி என் சிந்தை மயக்கிய 0298-3
ஈசனார் அருள் என் நெறிச் சென்றதே 0298-4

153. உம்பர் நாயகர் தம் கழல் அல்லது 0299-1
நம்புமாறு அறியேனை நடுக்கு உற 0299-2
வம்பு மால் செய்து வல்லியின் ஒல்கி இன்று 0299-3
எம் பிரான் அருள் எந்நெறிச் சென்றதே 0299-4

154. பந்தம் வீடு தரும் பரமன் கழல் 0300-1
சிந்தை ஆரவும் உன்னும் என் சிந்தையை 0300-2
வந்து மால் செய்து மான் எனவே விழித்து 0300-3
எந்தையார் அருள் எந் நெறிச் சென்றதே 0300-4

155. என்று சாலவும் ஆற்றலர் என் உயிர் 0301-1
நின்றது எங்கு என நித்திலப் பூண் முலை 0301-2
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான் 0301-3
சென்று தேவ ஆசிரியனைச் சேர்ந்த பின் 0301-4

156. காவி நேர் வரும் கண்ணியை நண்ணுவான் 0302-1
யாவரோடும் உரை இயம்பாது இருந்து 0302-2
ஆவி நல்குவார் ஆரூரை ஆண்டவர் 0302-3
பூவின் மங்கையைத் தந்து எனும் போழ்தினில் 0302-4

157. நாட்டு நல்லிசை நாவலூரன் சிந்தை 0303-1
வேட்ட மின் இடை இன் அமுதத்தினைக் 0303-2
காட்டுவன் கடலை கடைந்தது என்ப போல் 0303-3
பூட்டும் ஏழ் பரித் தேரேன் கடல் புக 0303-4

158. எய்து மென் பெடையோடும் இரை தேர்ந்து உண்டு 0304-1
பொய்கையில் பகல் போக்கிய புள் இனம் 0304-2
வைகு சேக்கை கண் மேற்செல வந்தது 0304-3
பையுள் மாலை தமியோர் புனிப்பு உற 0304-4

159. பஞ்சின் மெல் அடிப் பாவையர் உள்ளமும் 0305-1
வஞ்ச மாக்கள் தம் வல் வினையும் மான் 0305-2
அஞ்சு எழுத்தும் உணரா அறிவிலோர் 0305-3
நெஞ்சும் என்ன இருண்டது நீண்ட வான் 0305-4

160.  மறுவில் சிந்தை வன் தொண்டர் வருந்தினால் 0306-1
இறு மருங்குலார்க்கு யார் பிழைப்பார் என்று 0306-2
நறு மலர்க் கங்குல் நங்கை முன் கொண்ட புன் 0306-3
முறுவல் என்ன முகிழ்த்தது வெண் நிலா 0306-4

161. அரந்தை செய்வார்க்கு அழுங்கித் தம் ஆருயிர் 0307-1
வரன் கை தீண்ட மலர் குலமாதர் போல் 0307-2
பரந்த வெம் பகற்கு ஒல்கிப் பனி மதிக் 0307-3
கரங்கள் தீண்ட அலர்ந்த கயிரவம் 0307-4

162. தோற்றும் மன் உயிர்கட்கு எலாம் தூய்மை யே 0308-1
சாற்றும் இன்பமும் தண்மையும் தந்து போய் 0308-2
ஆற்ற அண்டம் எலாம் பரந்து அண்ணல் வெண் 0308-3
நீற்றின் பேர் ஒளி போன்றது நீள் நிலா 0308-4

163. வாவி புள் ஒலி மாறிய மாலையில் 0309-1
நாவலூரரும் நங்கை பரவையாம் 0309-2
பாவை தந்த படர் பெரும் காதலும் 0309-3
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினார் 0309-4

164.  தன் திருக் கண் எரி தழலில் பட்டு 0310-1
வெந்த காமன் வெளியே உருச் செய்து 0310-2
வந்து என் முன் நின்று வாளி தொடுப்பதே 0310-3
எந்தையார் அருள் இவ் வண்ணமோ என்பார் 0310-4

165.  ஆர்த்தி கண்டும் என் மேல் நின்று அழல் கதிர் 0311-1
தூர்ப்பதே எனைத் தொண்டு கொண்டு ஆண்டவர் 0311-2
நீர்த் தரங்க நெடும் கங்கை நீள் முடிச் 0311-3
சாத்தும் வெண் மதி போன்று இலை தண் மதி 0311-4

166. அடுத்து மேல் மேல் அலைத்து எழும் ஆழியே 0312-1
தடுத்து முன் எனை ஆண்டவர் தாம் உணக் 0312-2
கடுத்த நஞ்சு உன் தரங்கக் கரங்களால் 0312-3
எடுத்து நீட்டு நீ என்னை இன்று என் செயாய் 0312-4

167. பிறந்தது எங்கள் பிரான் மலயத்து இடைச் 0313-1
சிறந்து அணைந்தது தெய்வ நீர் நாட்டினில் 0313-2
புறம் பணைத் தடம் பொங்கு அழல் வீசிட 0313-3
மறம் பயின்றது எம் கோ தமிழ் மாருதம் 0313-4

168. இன்ன தன்மைய பின்னும் இயம்புவான் 0314-1
மன்னு காதலன் ஆகிய வள்ளல் பால் 0314-2
தன் அரும் பெறல் நெஞ்சு தயங்கப் போம் 0314-3
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம் 0314-4

169. கனம் கொண்ட மணி கண்டர் கழல் வணங்கிக் கணவனை முன் பெறுவாள் போல 0315-1
இனம் கொண்ட சேடியர்கள் புடை சூழ எய்து பெருங் காதலோடும் 0315-2
தனம் கொண்டு தளர் மருங்குல் பரவையும் வன் தொண்டர் பால் 0315-3
தனித்துச் சென்ற மனம் கொண்டு வரும் பெரிய மயல் கொண்டு தன் மணி மாளிகையைச் சார்ந்தாள் 0315-4

170. சீர் அடி மேல் நூபுரங்கள் அறிந்தன போல் சிறிது அளவே ஒலிப்ப முன்னர் 0316-1
வேறு ஒருவர் உடன் பேசாள் மெல்ல அடி ஒதுங்கி மாளிகையின் மேலால் 0316-2
ஏறி மரகதத் தூண்த்து இலங்கு மணி வேதிகையில் நலம் கொள் பொன் கால் 0316-3
மாறு இல் மலர்ச் சேக்கை மிசை மணி நிலா முன்றில் மருங்கு இருந்தாள் வந்து 0316-4

171. அவ் அளவில் அருகு இருந்த சேடிதனை முகம் நோக்கி ஆரூர் ஆண்ட 0317-1
மை விரவு கண்டாரை நாம் வணங்கப் போம் மறுகு எதிர் வந்தவர் ஆர் என்ன 0317-2
இவ் உலகில் அந்தணராய் இருவர் தேடு ஒருவர் தாம் எதிர் நின்று ஆண்ட 0317-3
சைவ முதல் திருத் தொண்டர் தம்பிரான் தோழனார் நம்பி என்றாள் 0317-4

172. என்ற உரை கேட்டலுமே எம் பிரான் தமரேயோ என்னா முன்னம் 0318-1
வன் தொண்டர் பால் வைத்த மனக் காதல் அளவு இன்றி வளர்ந்து பொங்க 0318-2
நின்ற நிறை நாண்முதலாம் குணங்களுடன் நீங்க உயிர் ஒன்றும் தாங்கி 0318-3
மின் தயங்கு நுண் இடையாள் வெவ் உயிர்த்து மெல் அணை மேல் வீழ்ந்த போது
0318-4

173. ஆர நறும் சேறு ஆட்டி அரும் பனி நீர் நறும் திவலை அருகு வீசி 0319-1
ஈர இளம் தளிர்க் குளரி படுத்து மடவார் செய்த இவையும் எல்லாம் 0319-2
பேர் அழலின் நெய் சொரிந்தால் ஒத்தன மற்று அதன் மீது சமிதை என்ன 0319-3
மாரனும் தன் பெரும் சிலையின் வலிகாட்டி மலர் வாளி சொரிந்தான் வந்து 0319-4

174. மலர் அமளித் துயில் ஆற்றாள் வரும் தென்றல் மருங்கு ஆற்றாள் மங்குல் வானில்
0320-1
நிலவு உமிழும் தழல் ஆற்றாள் நிறை ஆற்றும் பொறை ஆற்றா நீர்மை யோடும்
0320-2
கலவ மயில் என எழுந்து கருங் குழலின் பரம் ஆற்றாக் கையள் ஆகி 0320-3
இலவ இதழ்ச் செம் துவர் வாய் நெகிழ்ந்து ஆற்றாமையின் வறிதே இன்ன சொன்னாள்
0320-4

175. கந்தம் கமழ் மென் குழலீர் இது என் கலை வாண் மதியம் கனல்வான் எனை இச்
0321-1
சந்தின் தழலைப் பனி நீர் அளவித் தடவும் கொடியீர் தவிரீர் தவிரீர் 0321-2
வந்து இங்கு உலவும் நிலவும் விரையார் மலையான் நிலமும் எரியாய் வரும் ஆல்
0321-3
அம் தண் புனலும் அரவும் விரவும் சடையான் அருள் பெற்று உடையார் அருளார்
0321-4

176. புலரும் படி யன்றி இரவு என்ன அளவும் பொறையும் இறையும் தரியா 0322-1
உலரும் தனமும் மனமும் வினையேன் ஒருவேன் அளவோ பெரு வாழ்வு உரையீர்
0322-2
பலரும் புரியும் துயர்தான் இதுவோ படை மன் மதனார் புடை நின்று அகலார் 0322-3
அலரும் நிலவும் மலரும் முடியார் அருள் பெற்று உடையார் அவரோ அறியார் 0322-4

177. தேரும் கொடியும் மிடையும் மறுகில் திருவா ரூரிர் நீரே அல்லால் 0323-1
ஆர் என் துயரம் அறிவார் அடிகேள் அடியேன் அயரும் படியோ இதுதான் 0323-2
நீரும் பிறையும் பொறி வாள் அரவின் நிரையும் நிரை வெண்டலையின் புடையே
0323-3
ஊரும் சடையீர் வருவீர் உமது அன்பிலர் போல் யானோ உறுவேன் 0323-4

178. என்று இன்னவே பலவும் புகலும் இருளார் அளகச் சுருள் ஓதியையும் 0324-1
வன் தொண்டரையும் படிமேல் வர முன்பு அருளுவான் அருளும் வகையார் நினைவார்
0324-2
சென்று உம்பர்களும் பணியும் செல்வத் திருவாரூர் வாழ் பெருமான் அடிகள் 0324-3
அன்று அங்கு அவர் மன் தலை நீர் செயும் என்று அடியார் அறியும் படியால் அருளி
0324-4

179. மன்னும் புகழ் நாவலர் கோன் மகிழ மங்கை பரவை தன்னைத் தந்தோம் 0325-1
இன் அவ்வகை நம் அடியார் அறியும் படியே உரை செய்தனம் என்று அருளிப்
0325-2
பொன்னின் புரி புன் சடையன் விடையன் பொருமா கரியின் உரிவை புனைவான்
0325-3
அன்னம் நடையாள் பரவைக்கு அணிய ஆரூரன் பால் மணம் என்று அருள 0325-4

180. காமத் துயரில் கவல்வார் நெஞ்சில் கரையில் இருளும் கங்குல் கழி போம் 0326-1
யாமத்து இருளும் புலரக் கதிரோன் எழு காலையில் வந்து அடியார் கூடிச் 0326-2
சேமத் துணையாம் அவர் பேர் அருளைத் தொழுதே திரு நாவலர் கோன் மகிழத் 0326-3
தாமக் குழலாள் பரவை வதுவை தகு நீர்மை யினால் நிகழச் செய்தார் 0326-4

181. தென் நாவலூர் மன்னன் தேவர் பிரான் திருவருளால் 0327-1
மின் ஆரும் கொடி மருங்குல் பரவை எனும் மெல்லியல் தன் 0327-2
பொன் ஆரும் முலை ஓங்கல் புணர் குவடே சார்வாகப் 0327-3
பன் நாளும் பயில் யோகம் பரம்பரையின் விரும்பினார் 0327-4

182. தன்னை ஆள் உடைய பிரான் சரண் ஆர விந்த மலர் 0328-1
சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்துத் திருப் பதிகம் 0328-2
பன்னு தமிழ்த் தொடை மாலை பல சாத்திப் பரவை எனும் 0328-3
மின் இடையாள் உடன் கூடி விளையாடிச் செல்கின்றார் 0328-4

183. மாது உடன் கூட வைகி மாளிகை மருங்கு சோலை 0329-1
போது அலர் வாவி மாடு செய் குன்றின் புடை ஓர் தெற்றிச் 0329-2
சீதளத் தரளப் பந்தர் செழும் தவிசி இழிந்து தங்கள் 0329-3
நாதர் பூம் கோயில் நண்ணிக் கும்பிடும் விருப்பால் நம்பி 0329-4

184. அந்தரத்து அமரர் போற்றும் அணி கிளர் ஆடை சாத்திச் 0330-1
சந்தனத்து அளறு தோய்ந்த குங்குமக் கலவை சாத்திச் 0330-2
சுந்தரச் சுழியம் சாத்திச் சுடர் மணிக் கலன்கள் சாத்தி 0330-3
இந்திரத் திருவின் மேலாம் எழில் மிக விளங்கித் தோன்ற 0330-4

185. கையினிற் புனை பொன் கோலும் காதினில் இலங்கு தோடும் 0331-1
மெய்யினில் துவளும் நூலும் நெற்றியில் விளங்கும் நீறும் 0331-2
ஐயனுக்கு அழகு இதாம் என்று ஆயிழை மகளிர் போற்றச் 0331-3
சைவ மெய்த் திருவின் கோலம் தழைப்ப வீதியினைச் சார்ந்தார் 0331-4

186. நாவலூர் வந்த சைவ நல் தவக் களிறே என்றும் 0332-1
மேலவர் புரங்கள் செற்ற விடையவர்க்கு அன்பர் என்றும் 0332-2
தாவில் சீர்ப் பெருமை ஆரூர் மறையவர் தலைவ என்றும் 0332-3
மேவினர் இரண்டு பாலும் வேறு வேறு ஆயம் போற்ற 0332-4

187. கைக் கடா குரங்கு கோழி சிவல் கவுதாரி பற்றிப் 0333-1
பக்கம் முன் போதுவார்கள் பயில் மொழி பயிற்றிச் செல்ல 0333-2
மிக்க பூம் பிடகை கொள்வோர் விரை அடைப்பையோர் சூழ 0333-3
மைக் கரும் கண்ணினார்கள் மறுக நீள் மறுகில் வந்தார் 0333-4

188. பொலம் கலப் புரவி பண்ணிப் போதுவார் பின்பு போத 0334-1
இலங்கு ஒளி வலயப் பொன் தோள் இடை இடைமிடைந்து தொங்கல் 0334-2
நலம் கிளர் நீழல் சூழ நான்மறை முனிவரோடும் 0334-3
அலங்கல் அம் தோளினான் வந்து அணைந்தான் அண்ணல் கோயில் 0334-4

189. கண் நுதல் கோயில் தேவ ஆசிரியன் ஆம் காவணத்து 0335-1
விண்ணவர் ஒழிய மண் மேல் மிக்க சீர் அடியார் கூடி 0335-2
எண் இலார் இருந்த போதில் இவர்க்கு யான் அடியேன் ஆகப் 0335-3
பண்ணு நாள் எந்நாள் என்று பரமர் தாள் பரவிச் சென்றார் 0335-4

190. அடியவர்க்கு அடியன் ஆவேன் என்னும் ஆதரவு கூரக் 0336-1
கொடி நெடும் கொற்ற வாயில் பணிந்து கை குவித்துப் புக்கார் 0336-2
கடி கொள்பூம் கொன்றை வேய்ந்தார் அவர்க்கு எதிர் காணக் காட்டும் 0336-3
படி எதிர் தோன்றி நிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு 0336-4

191. மன் பெரும் திரு மா மறை வண்டு சூழ்ந்து 0337-1
அன்பர் சிந்தை அலர்ந்த செம் தாமரை 0337-2
நன் பெரும் பரம ஆனந்த நன் மது 0337-3
என் தரத்தும் அளித்து எதிர் நின்றன 0337-4

192. ஞாலம் உய்ய நடம் மன்றுள் ஆடின 0338-1
காலன் ஆர் உயிர் மாளக் கறுத்தன 0338-2
மாலை தாழ் குழல் மா மலையாள் செம் கை 0338-3
சீலம் ஆக வருடச் சிவந்தன 0338-4

193. நீதி மா தவர் நெஞ்சில் பொலிந்தன 0339-1
வேதி யாதவர் தம்மை வேதிப்பன 0339-2
சோதி ஆய் எழும் சோதி உட் சோதிய 0339-3
ஆதி மால் அயன் காணா அளவின 0339-4

194. வேதம் ஆரணம் மேல் கொண்டு இருந்தன 0340-1
பேதையேன் செய் பிழை பொறுத்து ஆண்டன 0340-2
ஏதம் ஆனவை தீர்க்க இசைந்தன 0340-3
பூத நாத நின் புண்டரீகப் பதம் 0340-4

195. இன்னவாறு ஏத்து நம்பிக் கேறு சேவகனார் தாமும் 0341-1
அந் நிலை அவர்தாம் வேண்டும் அதனையே அருள வேண்டி 0341-2
மன்னு சீர் அடியார் தங்கள் வழித் தொண்டை உணர நல்கிப் 0341-3
பின்னையும் அவர்கள் தங்கள் பெருமையை அருளிச் செய்வார் 0341-4

196. பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார் 0342-1
ஒருமையால் உலகை வெல்வார் ஊனம் மேல் ஒன்றும் இல்லார் 0342-2
அருமை ஆம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார் 0342-3
இருமை உம் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய் என்று 0342-4

197. நாதனார் அருளிச் செய்ய நம்பி ஆரூரர் நான் இங்கு 0343-1
ஏதம் தீர் நெறியைப் பெற்றேன் என்று எதிர் வணங்கிப் போற்ற 0343-2
நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்து நீ நிறை சொல் மாலை 0343-3
கோது இலா வாய்மையாலே பாடு என அண்ணல் கூற 0343-4

198. தன்னை ஆளுடைய நாதன் தான் அருள் செய்யக் கேட்டுச் 0344-1
சென்னியால் வணங்கி நின்ற திருமுனைப்பாடி நாடர் 0344-2
இன்னவாறு இன்ன பண்பு என்று ஏத்துகேன் அதற்கு யான் யார் 0344-3
பன்னுபா மாலை பாடும் பரிசு எனக்கு அருள் செய் என்ன 0344-4

199. தொல்லை மால் வரை பயந்த தூய் ஆள் தன் திருப் பாகன் 0345-1
அல்லல் தீர்ந்து உலகு உய்ய மறை அளித்த திரு வாக்கால் 0345-2
தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று 0345-3
எல்லை இல் வண் புகழாரை எடுத்து இசைப்பா மொழி என்றார் 0345-4

200. மன்னு சீர் வயல் ஆரூர் மன்னவரை வன் தொண்டர் 0346-1
சென்னி உற அடி வணங்கித் திருவருள் மேல் கொள் பொழுதில் 0346-2
முன்னம் மால் அயன் அறியா முதல்வர் தாம் எழுந்து அருள 0346-3
அந் நிலை கண்டு அடியவர் பால் சார்வதனுக்கு அணைகின்றார் 0346-4

201. தூரத்தே திருக் கூட்டம் பல முறையால் தொழுது அன்பு 0347-1
சேரத் தாழ்ந்து எழுந்து அருகு சென்று எய்தி நின்று அழியா 0347-2
வீரத்தார் எல்லார்க்கும் தனித் தனி வேறு அடியேன் என்று 0347-3
ஆர்வத்தால் திருத் தொண்டத் தொகைப் பதிகம் அருள் செய்வார் 0347-4

202. தம் பெருமான் கொடுத்த மொழி முதல் ஆகத் தமிழ் மாலைச் 0348-1
செம் பொருளால் திருத் தொண்டத் தொகை ஆன திருப் பதிகம் 0348-2
உம்பர் பிரான் தான் அருளும் உணர்வு பெற உலகு ஏத்த 0348-3

எம் பெருமான் வன் தொண்டர் பாடி அவர் எதிர் பணிந்தார் 0348-4

203. உம்பர் நாயகர் அடியார் பேர் உவகை தாம் எய்த 0349-1
நம்பி ஆரூரர் திருக் கூட்டத்தின் நடுவு அணைந்தார் 0349-2
தம்பிரான் தோழர் அவர் தாம் மொழிந்த தமிழ் முறையே 0349-3
எம்பிரான் தமர்கள் திருத் தொண்டு ஏத்தல் உறுகின்றேன் 0349-4

திருமலைச் சருக்கம் முற்றிற்று.

---

This file was last revised on 08 May 2004

---

See Also:
1. Stories of the nAyanmAr in English with Pictures

Back to periya purANam Page
Back to thirumuRai Page
Back to Shaiva Sidhdhantha Home Page